REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2022 ஜூலை 4 திங்கட்கிழமை

THINAKARAN தினகரன்


1932 - 2022

வரு. 90 இல. 155 | Monday 04, July, 2022 | 16பக்கங்கள் | 40/-

நட்பு நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க

## அமெரிக்க இராஜாங்க செயலாளர் வருகிறார்

நவம்பரில் வருகை தந்து ஆராய்வார்



அமெரிக்க இராஜாங்க செயலர் அண்டனி பிளிங்கன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த விஜயமானது பெரும்பாலும் 06

## அடுத்துவரும் 10 நாட்களுக்குள் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு

சுயாதீனமாக செயற்படும் பின்வரிசை MPக்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



அடுத்துவரும் 10 நாட்களுக்குள் எண்ணெய் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாக செயற்பட்ட பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் (02) ஜனாதிபதியை சந்தித்த போதே அவர் இதனை 06

## IMF இன் உதவியை இலங்கை பெற அமெரிக்க செனட் சபை நிபந்தனை

இரு முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டியது




சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்னர் இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார குழு அறிவித்துள்ளது. அதன்படி முதலில் மத்திய வங்கியின் சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மோசடி மற்றும் 06

## இன்று முதல் 08 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை மூடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இன்று திங்கட்கிழமை முதல் அரசாங்க மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் அனைத்தும் ஒரு வார காலத்திற்கு 06

# ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 10 எரிபொருள் கப்பல்கள்

முடிந்தளவு விரைவாக எரிபொருட்களை மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் நேற்று தெரிவிப்பு



நாட்டை வந்தடையவுள்ளதாக அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் இரு மாதங்களில் 10 எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைய உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதன்படி, 40,000 மெற்றிக் தொன் கொண்ட டீசல் கப்பல் ஜூலை 8 அல்லது 9 ஆம் திகதி இலங்கைக்கு வரும். மற்றுமொரு கப்பல் எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை இலங்கைக்கு வரவுள்ளது.

கடந்த 30ஆம் திகதி இந்த எரிபொருள் கப்பலுக்காக 28 மில்லியன் டொலர்கள் முன்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 49 மில்லியன் டாலர்கள் பணம் வைப்பு செய்யப்பட உள்ளது. 06

## அமெரிக்க முதலீடுகளை ஈர்ப்பது குறித்து இருதரப்பு கலந்துரையாடல்

USA தூதுவருடன் அமைச்சர் நஸீர் அஹமட் பேச்சு



சுரங்கத்தொழில் மற்றும் கனியவளங்கள் அகழ்வுகளை கைத்தொழில்துறையில் முதலிடுவதற்காக அமெரிக்காவின் ஒத்துழைப்புக்களை பெறுவது குறித்து அமெரிக்க தூதுவருடன் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்துரையாடினார். சுற்றுலாத்துறை அமைச்சில் கடந்த (01) அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்குடன் நடாத்திய கலந்துரையாடலிலே, இதுகுறித்துப் பேசப்பட்டது.

இருதரப்பு உறவுகள் குறித்து மிகுந்த அவதானம் செலுத்தப்பட்ட இச்சந்திப்பில், இலங்கையின், தற்போதைய நிதி நெருக்கடிகளுக்கு 06

## மின்சாரம் துண்டிப்பால் லிப்டில் சிக்கிய 10 பேர்

கல்கமுவ ஆஸ்பத்திரியில் சம்பவம்



20 நிமிடங்களின் பின்னரே மீட்பு

கல்கமுவ ஆதார வைத்தியசாலையில் திடீரென ஏற்பட்ட மின் தடையால் 10 பேருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது. நேற்று காலை மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது, லிப்ட் இடை நடுவில் சிக்கிக் கொண்டுள்ளது. இதன் போது சுமார் பத்து பேர் லிப்டில் சிக்கியுள்ளதாக 06

## பிரதமரை விமர்சிக்காது அவகாசம் வழங்குங்கள்

பழனி திகாம்பரம் MP வேண்டுகோள் விடுப்பு




"நெருக்கடியான நிலைமையில் தான் பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். எனவே, அவரை உடனடியாக விமர்சிக்காமல் அவருக்குக் கால அவகாசம் வழங்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத்தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான 06

அமைச்சர் நஸீர் தலைமையில்

## ஹஜ் குழுவினர் நேற்று ஜித்தா நோக்கி பயணம்


மர்ஜான் பளீல் MPயும் பயணமானார்



சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையிலான ஹஜ் குழுவினர் நேற்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக ஜித்தா புறப்பட்டனர். 06

## தனியார் பஸ் சேவைகள் இன்று இடம்பெறுவது சந்தேகம்?

முழுமையாக முடங்கும் என்கிறார் கெமுனு



நாடு முழுவதும் இன்று தனியார் பஸ் சேவை முழுமையாக முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். பொதுப் போக்குவரத்து 06

வவுனியா, மாத்தறை, கண்டி ஆகிய பிரதேசங்களில்

## ஒரு நாள் கடவுச்சீட்டு வழங்கல் இன்று முதல் ஆரம்பமாகிறது

முன்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகோள்



குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் இன்று திங்கட்கிழமை (4) முதல் மாத்தறை, வவுனியா மற்றும் கண்டி ஆகிய பிராந்திய அலுவலகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

19+ ஆகவே 22 ஆவது திருத்தம் முன்வைக்கப்படுகிறது

## 19 ஆவது திருத்தத்தை விடவும் 22 இல் முன்னேற்றகர யோசனைகள்

22 நிறைவேற்றப்பட்டதும் புதிய அரசியலமைப்பை உருவாக்க ஜனாதிபதி பணிப்பு




(ஷம்ஸ் பாஹிம்)


19 மைனஸாக அன்றி 19 பிளஸ் ஆகவே 22 ஆவது திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. 19 ஆவது திருத்தத்தை விட முன்னேற்றகரமான யோசனையாக 06

## ஜெக்சன் பயணித்த கார் யானையுடன் மோதி விபத்து

அநுராதபுரத்தில் சம்பவம்; மூவர் ஆஸ்பத்திரியில்



அநுராதபுரம் தலாவ வீதியில் மொரகொட பகுதியில் வைத்து காட்டு யானையொன்றின் மீது கார் மோதியதில் பிரபல சிங்கள நடிகர் ஜாக்சன் அந்தனி மற்றும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர். கார் மோதியதில் இரு 06



மின் கட்டண பட்டியல் அடிப்படையில் இனி Gas
விரைவில் நடைமுறைக்கு வருகிறது 03




கிளிநொச்சி வீடு ஒன்றில்
பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை எரிபொருள் 03

தெஹிவளை முதல் மாத்தறை வரையில்

## நிலப்பகுதிகளுக்குள் திடீரென புகுந்த கடல் நீரினால் பெரும் பீதி

கரையோர பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவிப்பு





நாட்டின் சில பகுதிகளில் கடல் அலைகள் திடீரென நிலத்திற்குள் புகுந்துள்ளன. தெஹிவளை, அம்பலாங்கொடை, மாத்தறை மற்றும் காலி ஆகிய பகுதிகளில் பல இடங்களில் கடல் அலைகள் இவ்வாறு கரையை தாண்டி நிலத்திற்குள் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அக்குரல கஹவ தெல்வத்த பகுதியிலிருந்தும் கடல் அலைகள் காலி கொழும்பு பிரதான வீதியை 06

## அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே லிட்ரோ Gas

விநியோகம் தொடர்பில் நிறுவனம் அறிவிப்பு



அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே எரிவாயு விநியோகம் தொடரும் என லிட்ரோ தெரிவித்துள்ளது. ஜூலை 7 ஆம் திகதி வரை உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு வெளியிடப்படாது எனவும் ஜூலை மாதத்துக்குள் 33,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். இதற்கமைய, ஜூலை 6 ஆம் திகதி குறித்த கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். 06

## கொவிட் தொற்று முற்றாக நீங்கவில்லை

கணிசமாக அதிகரிப்பதாக தெரிவிப்பு



நாட்டில் கொவிட் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

573 கொவிட் தொற்று உறுதியான 573 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வார இறுதி பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். மேலும், கடந்த ஆறு நாட்களில் 71 கொவிட் தொற்றாளர்கள் 06

பொதுஜன பெரமுன அரசின் கீழ்

## பிரதமர் பதவியை ஏற்கப்போவதில்லை

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



மகாசங்கத்தின் வழிகாட்டுதலின்படி கூடிய விரைவில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அமைக்கப்படாவிட்டால் இலங்கை கலவரங்கள் மற்றும் போராட்டங்களின் மையமாக மாறும் என்றும் அவர் கூறியுள்ளார். கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், 06

# சர்வதேச செய்திகள்

## நாணயத்தில் 3 பூஜ்யத்தை அகற்றியது சியராலியோன்




பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் சியராலியோன் தனது நாணயத்தாளில் மூன்று பூஜ்யங்களை அகற்றி புதிய நாணயத்தாளை அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய நாணயத்தாலின்படி பழைய 10,000 லியோன் நாணயம் 10 லியோன் நாணயமாக மாற்றப்பட்டுள்ளது. இது 1 அமெரிக்க டொலருக்கு குறைவான பெறுமதியாகும். எனினும் இந்த மாற்றம் பொதுமக்களின் வாங்கும் திறனில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று சியராலியோன் மத்திய வங்கி அறிவித்துள்ளாது. எனினும் இது பொருளாதார சூழலை மேலும் மோசமடையச் செய்யும் என்று சிலர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த மேற்கு ஆபிரிக்க நாட்டில் அதிகரித்து வரும் பணவீக்கம், அந்நியச் செலாவணியின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் அதிகம் இறக்குமதியில் தங்கியிருப்பதன் காரணமாக பொருளாதார ஸ்திரமற்ற சூழல் நிலவுகிறது.

இங்கு கடந்த ஆறு மாதங்களில் உணவு விலை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

## சீனா பாதுகாப்பு அச்சுறுத்தல்: நேட்டோ மாநாட்டில் அறிவிப்பு



சீனா நேட்டோவுக்கு சவால் விடுப்பதாகவும் மேற்கத்திய நலன்களுக்கு எதிராக அது ரஷ்யாவுடன் நெருங்கிய உறவை வைத்திருப்பதாகவும் நேட்டோ மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமான சீனாவிடம் இருந்து அமைப்பு ரீதியான போட்டியை எதிர்கொள்வதாகவும் நேட்டோ அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

“எமது நலன், பாதுகாப்பு மற்றும் பெறுமானங்களுக்கு பரந்த அளவு சவால் விடுப்பதாக சீன மக்கள் குடியரசு குறிப்பிடும் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் உள்ளன. சீனா தனது பூகோள தடம் மற்றும் திட்டத்தை அதிகரிப்பதற்கு அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ கருவிகளை பயன்படுத்துவதோடு, அதன் மூலோபாயம், நோக்கங்கள் மற்றும் இராணுவ கட்டமைப்பு பற்றி தொடர்ந்தும் மறைமுகத்தன்மை காணப்படுகிறது” என்று மெட்ரிட்டில் இடம்பெற்ற மாநாட்டில் கூறப்பட்டுள்ளது.

## கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருந்த 77 பேர் மீட்பு



நைஜீரியாவின் தென்மேற்கு மாநிலமான ஒன்டோவில் தேவாலயம் ஒன்றுக்குள் சிக்கி இருந்த சிறுவர்கள் உட்பட 77 பேரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் பல மாதங்களாக அங்கு சிக்கி இருந்ததாக நம்பப்படுகிறது.

ஏப்ரலில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை நிகழவிருப்பதாக இவர்களுக்கு கூறப்பட்டுள்ளது. இதனால் அந்த நிகழ்வை பார்ப்பதற்காக பலரும் பாடசாலையை கைவிட்டு தேவாலயத்தில் காத்திருந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பிள்ளைகளை காணவில்லை என்றும் அவர்கள் தேவாலயத்தில் இருப்பதாக தாம் நம்புவதாகவும் தாய் ஒருவர் பொலிஸில் முறையிட்டதை அடுத்தே இந்தத் தேடுதல் இடம்பெற்றுள்ளது. கூட்டுக் கடத்தல் சந்தேகத்தில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தேவாலயத்தின் பாதிரியார் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தவறுதலாக 300 மடங்கு சம்பளம் பெற்றவர் மாயம்



இறைச்சி தொழிற்சாலையின் தொழிலாளர் ஒருவருக்கு தவறுதலாக 300 மடங்கு சம்பளம் போடப்பட்டதை தொடர்ந்து அவர் அந்தப் பணத்தையும் எடுத்துக்கொண்டு காணாமல்போயுள்ளார்.

தென் அமெரிக்க நாடான சிலியைச் சேர்ந்த பெயர் குறிப்பிடப்படாத அந்தத் தொழிலாளிக்கு 500,000 சிலி பெசோஸ் மாதச் சம்பளத்திற்கு பதில் 165,398,851 பெசோஸ் பணம் வங்கியில் போடப்பட்டிருந்தது.

சியால் என்ற அந்த தொழிற்சாலை தனது காணாமல்போன ஊழியர் மீது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

தவறுதலாக வழங்கப்பட்ட பணத்தை திருப்பித் தருவதாக தொழில்சாலை நிர்வாகத்திற்கு அந்த ஊழியர் வாக்குறுதி அளித்த நிலையில் பதவியை இராஜினாமா செய்துவிட்டு காணாமல்போயுள்ளார்.

## லிபியப் பாராளுமன்றத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர் தீ வைப்பு



லிபியாவில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் இழுபறிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ள சூழலில் நாட்டின் பாராளுமன்றம் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் மிகப் பெரிய எண்ணெய் இருப்பு நாடாக இருக்கும் லிபியாவில் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வரை மின் வெட்டு அமுலில் இருப்பதோடு விலையேற்றங்கள் மற்றும் அரசியல் நிலை ஆகிய காரணங்களால் நாட்டின் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

இந்நிலையில் கிழக்கு நகரான டொப்ரூக்கில் இருக்கும் பாராளுமன்றக் கட்டடத்தின் ஒரு பகுதிக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்துள்ளனர். பாராளுமன்றத்திற்கு வெளியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் டயர்களை கொளுத்தும் நிலையில் அங்கு அடர்த்தியான புகை வெளியாகும் படங்கள் இணையதளத்தில் வெளியாகியுள்ளன.

தலைநகர் திரிபோலியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தேர்தலை நடத்தும்படி கோசம் எழுப்பினர். இதன்போது பல அரச கட்டடங்களும் தாக்கப்பட்டன. லிபியாவின் நீண்ட கால ஆட்சியாளரான முஅம்மர் கடாபி 2011இல் நேட்டோ ஆதரவு எழுச்சிப் போராட்டத்தின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அந்நாட்டில் அரசில் குழப்ப சூழல் நீடித்து வருகிறது.

லிபியாவில் கடந்த ஆண்டு டிசம்பரில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை நடத்த திட்டமிடப்பட்டபோதும் நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கில் உள்ள போட்டி அரசுகளிடம் அதற்கான உடன்பாடு எட்டப்படவில்லை.

## ஆர்ஜன்டீன பொருளாதார அமைச்சர் திடீர் விலகல்



ஆர்ஜன்டீனாவில் பொருளாதார நெருக்கடி தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் அந்நாட்டு பொருளாதார அமைச்சர் மார்டின் குஸ்மான் இராஜினாமா செய்துள்ளார்.

2019 பிற்பகுதியில் பதவி ஏற்ற குஸ்மான் ஆர்ஜன்டீனாவின் கடனை மறுசீரமைப்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

தமக்கு பதில் ஒருவரை நியமிப்பதில் ஆளும் கூட்டணிக்குள் அரசியல் உடன்பாடு ஒன்றுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச அளவில் உணவு மற்றும் எரிசக்தி விலை அதிகரித்திருக்கும் சூழலில் ஆர்ஜன்டீனாவில் பணவீக்கம் 60 வீதமாக இருப்பதோடு அந்நாட்டு நாணயமும் பலவீனம் அடைந்துள்ளது.

டொலருக்கு எதிரான ஆர்ஜன்டீன நாணயமான பெசோ வீழ்ச்சி கண்டு பொருளாதார குழப்பத்திற்கு மத்தியிலேயே குஸ்மான் இராஜினாமா செய்துள்ளார். அவரது வெளியேற்றம் எதிர்கால ஆர்ஜன்டீன பொருளாதார கொள்கை பற்றி பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஜனாதிபதி அல்பர்டோ பெர்னான்டஸுக்கு, குஸ்மான் எழுதிய இராஜினாமா கடிதத்தில் அரசுக்குள் இருக்கும் பிளவுகள் பற்றி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்தப் பிரச்சினை இரகசியமானதல்ல. நாட்டின் பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதிக்கு இடையே முரண்பாடு காணப்பட்டு வருகிறது.

## சிட்னி வெள்ளம்: பல்லாயிரம் மக்கள் வெளியேற உத்தரவு



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வெள்ளத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி உத்தரவிடப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையோரம் பலத்த காற்றும், கடும் மழையும் வெள்ள நிலைமையை மோசமாக்கக்கூடும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வாகனங்கள் வெள்ளத்தில் சிக்கியிருப்பதைப் பார்க்க முடிவதாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர். மீட்புப் படையினர் படகுகளில் சென்று மக்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையோர வட்டாரத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை மேலும் கடுமையாக இருக்கும் என்று வானிலை ஆய்வகம் எச்சரித்துள்ளது.

“இது உயிர் அச்சுறுத்தல் கொண்ட அவரச நிலையாக உள்ளது” என்று நியு சவுத் வேல்ஸ் மாநில அவசர சேவைகள் அமைச்சர் ஸ்டபனி குக் தெரிவித்துள்ளார். இந்தப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் தாக்கிய திடீர் வெள்ளத்தில் 20 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2 ஆக உடைந்த கப்பலில் 27 பேரைக் காணவில்லை



ஹொங்கொங்கில் ‘சாபா’ சூறாவளியில் சிக்கி மூழ்கிய கப்பலில் எஞ்சியிருந்த 27 பேரை உயிருடன் மீட்கும் சாத்தியம் மிகவும் குறைவு என்று அரசாங்க மீட்பு அதிகாரிகள் கூறியுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகள் தொடர்கின்றன.


கடந்த சனிக்கிழமை கப்பலில் இருந்த மூவர் காப்பாற்றப்பட்டனர். மொத்தம் 30 பேர் கப்பலில் இருந்தனர்.

சம்பவம் நடந்த இடத்தில் பலத்த காற்று வீசுவதால் மீட்புப் பணிகள் தடைப்பட்டன. மீட்புப் பணியில் உதவ ஹொங்கொங் அரசாங்கம் 9 விமானங்களை அனுப்பி வைத்தது.

கப்பல் கடலில் 2ஆக உடைந்ததால், சிலர் கப்பலிலிருந்து வெளியேறி இருக்கக்கூடும் என உயிர் பிழைத்தவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

ஹொங்கொங்கில் ‘சாபா’ சூறாவளியில் பொதுப் போக்குவரத்து தடைப்பட்டதோடு வர்த்தகங்களை மூட வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## ஹிஸ்புல்லா ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது இஸ்ரேல்



மத்தியதரைக் கடலின் பிரச்சினைக்குரிய பகுதி ஒன்றில் உள்ள இஸ்ரேலின் எண்ணெய் குதங்களில் ஒன்றை நோக்கி பறந்த ஹிஸ்புல்லாவின் மூன்று ட்ரோன்களை இஸ்ரேல் சுட்டு வீழ்த்தியுள்ளது.

லெபனானில் இருந்து அனுப்பப்பட்ட இந்த ட்ரோன்கள், போர் விமானங்கள் மற்றும் கப்பலில் பொருத்தப்பட்ட ஏவுணைகள் மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ட்ரோன்களை தாம் அனுப்பியதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

கரிஷ் எரிவாயு துறையின் உரிமை தொடர்பில் இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே பற்றம் நீடித்து வருகிறது. இந்த நீண்ட கால பிரச்சினையை தீர்க்க அமெரிக்க வலுசக்தித் தூதுவர் அமோஸ் ஹொச்டைன் மத்தியஸ்தம் வகிக்கிறார். ஐ.நா அங்கீகரித்த தனது பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் இந்த துறை இருப்பதாக இஸ்ரேல் கூறும் அதேநேரம் அதன் சில பகுதிகளுக்கு லெபனான் உரிமை கோருகிறது.

## ஈரானில் பூகம்பம்: ஐவர் உயிரிழப்பு



ஈரானின் தெற்கு மாகாணமான ஹொர்மொஸ்கானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பம் மற்றும் அதன் பின்னரான அதிர்வுகளில் குறைந்தது ஐவர் உயிரிழந்திருப்பதோடு 50க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கடற்கரைக்கு அருகில் கடந்த சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி 2 மணி அளவில் இந்த பூகம்பம் ஏற்பட்டுள்ளது. 6 ரிச்டர் அளவில் பதிவான பூகம்பத்திலேயே பலரும் பாதிக்கப்பட்டிருப்பதாக அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது. அதற்கு பின்னர் ஏற்பட்ட அதிர்வுகளும் சக்திவாய்ந்ததாக இருந்துள்ளன.

சயே கோஷ் என்ற கிராமம் ஒன்று தரைமட்டமாகி இருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

“மக்கள் ஏற்கனவே வீடுகளை விட்டு வெளியே வந்திருந்ததால் அடுத்த இரண்டு தீவிர அதிர்வுகளால் பாதிக்கப்படவில்லை” என்று பூகம்பம் மையம் கொண்டிருந்த பகுதிக்கு அருகில் இருக்கும் பன்டார் லெங்கே நகர ஆளுநர் பொவாத் மொராட்சதா தெரிவித்தார்.

அண்டை நாடான ஆப்கானில் கடந்த மாதம் இடம்பெற்ற பூகம்பத்தில் குறைந்தது 1000 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனுக்கு அருகிலுள்ள ரஷ்ய நகரத்தில் வெடிப்பு: மூவர் பலி



உக்ரைன் எல்லைக்கு அருகில் இருக்கும் ரஷ்ய நகரான பெல்கொரோட்டில் இடம்பெற்ற வெடிப்புகளில் மூவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த வெடிப்புகளால் 11 தொடர்மாடி கட்டடங்கள் மற்றும் குறைந்தது 37 தனியார் குடியிருப்புக் கட்டடங்கள் சேதம் அடைந்திருப்பதாக அந்தப் பிராந்திய ஆளுநர் வியாசெல்சோவ் கிளாட்கோவ் தெரிவித்துள்ளார்.

இந்த வெடிப்புகளால் வான் பாதுகாப்பு அமைப்பு இயக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநரின் இந்த அறிவிப்பு சுயாதீனமாக உறுதி செய்யப்படாததோடு இது பற்றி உக்ரைன் தரப்பில் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. ஆனால் அந்தத் தாக்குதல்களுக்கு உக்ரைனியப் படைகள் தான் காரணம் என்று ரஷ்யா தரப்பில் கூறப்படவில்லை.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததிலிருந்தே, உக்ரைன் பெல்கொரொட் பகுதியில் தாக்குதல் நடத்தி வருவதாக ரஷ்யா பலமுறை குற்றஞ்சாட்டியுள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஜுலை 4 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.35
லுஹர் - 12.16
அஸர் - 03.43
மஃரிப் - 06.31
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆனி 20
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி





இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி பீ மெடரி அண்மையில் பொதுநிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்தனவை அமைச்சில் வைத்து சந்தித்தார். இதன்போது தற்போதைய நாட்டு நிலை மற்றும் இருதரப்பு உறவு குறித்து முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

## வினாத்தாள் திருத்தும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

## இந்தியாவிலிருந்து 40,000 மெ.தொன் யூரியாவுடன் வரும் பசளை கப்பல்

### 8ம் திகதி நாட்டை வந்தடையும்; ரூ. 10,000 வீதம் விவசாயிகளுக்கு விநியோகம்

**ஷம்ஸ் பாஹிம்**

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் யூரியா உர மூட்டையை அடுத்த வாரம் முதல் அனைத்து விவசாயிகளுக்கும் 10,000 ரூபா மானிய விலையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

யூரியா உர மூடை ஒன்று சந்தையில் 42,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டாலும், விவசாயிகளுக்கு அவற்றை 10,000 ரூபா சலுகை விலையில் வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த விலையில் யூரியா மூடை ஒன்றை வழங்குமாறு பல பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



விவசாயிகளுக்கு தரம் குறைந்த பசளை வழங்கப் போவதாக சிலர் வதந்தி பரப்பினாலும், நிபுணர் குழுவினால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்திய பின்னரே அவை விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

40,000 மெற்றிக் தொன் யூரியா பசளை கொண்ட முதலாவது கப்பல் எதிர்வரும் 08 ஆம் திகதி இரவு எமது நாட்டை வந்தடையும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் இந்த யூரியா உரத்தை ஹெக்டேயருக்கு 100 கிலோ வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமரவீர தெரிவித்தார்.

ஓமானிடம் இருந்து இந்த யூரியா உர இருப்புக்களை பெற்றுக்கொண்ட பின்னர், விவசாய அமைச்சு அனைத்து விவசாய 06

## இளம் குடும்பத்தினருக்கு சிறுநீரகம் தேவை

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை சீனன்கோட்டை, குட்டிமலை (வெலகெதர தோட்டம், கரந்தகொடை) இல. 33 ஸீ என்ற இலக்கத்தில் வசிக்கும் அஸ்ஸெய்யித் பௌஸ் மவ்லானா வயது 32 சிறுநீரக நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு உடனடியாக சிறுநீர் மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என லங்கா வைத்தியசாலையின் விஷேட வைத்திய நிபுணர் டாக்டர் ஸூர்ஜித் ஸோமையா கூறியுள்ளார். இவருக்கு "O" பொசிடிவ் வகை சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுகிறது. சிறுநீரகத்தை வழங்க விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு குடும்பத்தினர் கேட்டுள்ளனர். தொலைபேசி இல. 076 841 6920, 076 344 5884, 077 682 6232, 076 227 7511.

## 13,200 லீற்றர் எரிபொருளுடன் பயணித்த பவுஸர் தடம்புரண்டு விபத்து



டீசல் ஏற்றிச் சென்ற பவுஸர் ஒன்று சனிக்கிழமை (02) அதிகாலை விபத்துக்குள்ளானது.

ஹங்வெல்ல பூகொட வீதியில் கிரிதர நகருக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பவுஸரில் சுமார் 13,200 லீற்றர் டீசல் இருந்ததாகவும் விபத்தில் எரிபொருள் டாங்கிக்கு சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் சீன தூதுவர் சந்திப்பு

## சாத்தியமான எல்லா வகையிலும் உதவிகளை வழங்க சீனா தயார் என தூதுவர் தெரிவிப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங்கை அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார். இலங்கைக்கான சீனாவின் தொடர்ச்சியான உதவிகளை அமைச்சர் பீரிஸ் பாராட்டினார். இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்துள்ள எரிபொருள், உணவு மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தூதுவருக்குத் தெரிவித்தார். இந்த சவால்களை எதிர்கொள்வதற்காக, இருதரப்புப் பங்காளிகளும் சர்வதேச முகவர்களும் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

'ஒரே சீனக் கொள்கை' இல் இலங்கை தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் என சீனத் தூதுவரிடம் உறுதியளித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சீனாவின் இறையாண்மை மற்றும் ஆட்புல 06



## இந்திய வர்த்தக நிறுவன தலைவர்களுக்கு 5 வருட விசா

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் வரவேற்பு



இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுக்கு 5 வருட விசா கையளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் தம்மிக பெரேராவினால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடுகளை மேம்படுத்தவும் இலகுவாக வர்த்தக நடவடிக்கைககளை மேற்கொள்ளவும்வரவேற்கத்தக்கநடவடிக்கையாகும் என்று இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

நாட்டில் வெளிநாடு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் வீசாக்களின் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அண்மையில் அமைச்சர் தம்மிக்க பெரேரா அறிவித்திருந்தார்.

அத்தோடு தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்லவிருப்போரிடம், உரிய ஆவணங்கள் அனைத்தும் காணப்படுமாயின் அவர்களுக்கு 06

## தங்க நகைகளை விற்கும் பொதுமக்கள்

### எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு நிலை



தங்க நகைகளை விற்பனை செய்வதற்காக வர்த்தக நிலையங்களுக்கு செல்லும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் தங்களிடம் உள்ள தங்க நகைகளை விற்பனை செய்வதாக அந்த சங்கத்தின் தலைவர் ஏ.விஜயகுமார் எமது செய்தி சேவைக்கு குறிப்பிட்டார்.

அத்துடன் புதிதாக தங்கத்தை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் 5 முதல் 10 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கட்டாய தேவைகளுக்காக மாத்திரமே தங்க நகை கொள்வனவில் மக்கள் ஈடுபடுவதாக அகில இலங்கை நகை 06

## கடலில் விழுந்து பல்கலை மாணவன் பலி



பெலியத்தை சீதகலை கடற்கரையில் நீராடச் சென்ற ருஹுணு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவின் முதலாம் வருட மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி காணமல் போயுள்ளார்.

ருஹுணு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் மூவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், அவர்களில் ஒருவர் காணாமல் போனதாகவும், இருவர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் கந்தர பொலிஸார் தெரிவித்தனர்.

காலி தல்கம்பல பிரதேசத்தில் வசித்து வந்த 22 வயதுடைய ருஹுணு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் முதலாம் வருட மாணவியான பங்கஜ ஜயோதா காணாமல் போயுள்ளார்.

கடல் திடீரென கொந்தளிப்பு ஏற்பட்டு வலுவான அலைகள் உருவானதால் 06

## மின் கட்டண பட்டியல் அடிப்படையில் இனி Gas

### விரைவில் நடைமுறைக்கு வருகிறது



சமையல் எரிவாயுவைப் பெறுவதற்கான மின்சாரக் கட்டண பட்டியலை கட்டாயம் சமர்ப்பிக்கும் முறைமையொன்றை தற்போது தயாரித்து வருவதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு கறுப்பு சந்தை மாஃபியாவை தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

அதன்படி, ஒருவர் எரிவாயுவைப் பெற விரும்பினால், எதிர்காலத்தில் அவரது வீட்டின் மின் கட்டண பட்டியலையும் எரிவாயு விற்பனையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக தனுஷ்கோடிக்கு படகில் சென்ற முதியவர் பலி

### சிகிச்சை பலனளிக்கவில்லை என தகவல்

தனுஷ்கோடியில் மயங்கிய நிலையில் தஞ்சமடைந்திருந்த இலங்கையர்கள் இருவரில் வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி கடற்கரையில் மயங்கிக் கிடந்த நிலையில் மீட்கப்பட்ட குறித்த இருவரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந் நிலையில் மன்னார் 06

## பொலிஸ் அதிகாரிகளுக்கு 4,000 துவிச்சக்கர வண்டிகள்

### வழங்குவது தொடர்பில் அரசு அவதானம்



பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 4000 சைக்கிள்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், பொலிஸாரின் கடமைகளை இலகுவாக்கும் நோக்கில் இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக சில விசாரணைகள் மற்றும் களப்பணிகள் தடைப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இத்தகைய நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில், இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கிளிநொச்சியில் வீடு ஒன்றில்

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை எரிபொருள்



கிளிநொச்சியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 31 பெரல் டீசல், ஒரு பெரல் பெற்றோல், 25 லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. கிளிநொச்சி ஏ9 வீதி அருகில் உள்ள வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரினால் நேற்று (03) காலை இவை கைப்பற்றப்பட்டுள்ளன

கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த வீட்டைச் சுற்றிவளைத்த பொலிஸார் இவற்றைக் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.44 | 255.14 |
| கனடியன் டொலர் | 274.28 | 287.13 |
| யூரோ | 370.41 | 385.18 |
| ஜப்பான் யென் | 2.5919 | 2.7006 |
| சிங்கப்பூர் டொலர் | 254.57 | 265.09 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 430.03 | 447.02 |
| சுவிஸ் பிராங்க் | 371.37 | 387.81 |
| அமெரிக்க டொலர் | 355.76 | 367.12 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 954.54 | கட்டார் ரியால் | 97.98 |
| குவைத் டினார் | 1,173.57 | சவூதி ரியால் | 95.91 |
| ஓமான் ரியால் | 934.73 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 97.97 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 20ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று

*தீய செயல்களால் பொருளைத் திரட்டி, அதைக் காப்பது, சுடாத பச்சைமண் பானையில் நீரை ஊற்றி அதைச் சேமிப்பது போலாகும்*

## மீண்டும் அச்சுறுத்தும் கொவிட்!

இன்றைய நவீன அறிவியல் உலகில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திய கொவிட் 19 தொற்று மீண்டும் தலை தூக்குமா என்ற அச்சமும் கேள்வியும் எழுந்துள்ளன. இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும், சீனாவின் சில மாநிலங்களில் இத்தொற்றுக் கட்டுப்பாட்டுக்கென அவ்வப்போது முன்னெடுக்கப்படுகின்ற முடக்கங்களும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

அத்தோடு இத்தொற்று பெருவீழ்ச்சியை அடைந்ததும் முகக்கவசம் அணியத் தேவையில்லை என ஏற்கனவே அறிவித்திருந்த பிரித்தானிய உள்ளிட்ட நாடுகளும் கூட அதனை மீண்டும் அணிவதற்கான விதிமுறைகளை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளன.

அந்த வகையில் இலங்கையும் ஏனைய நாடுகளைப் போன்று கொவிட் 19 தொற்றின் பரவுதல் பெருவீழ்ச்சி நிலையை அடைந்ததும் கட்டுப்பாடுகளைக் கட்டம் கட்டமாகத் தளர்த்தி இயல்பு நிலையையும் ஏற்படுத்தியது. அத்தோடு கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் முகக்கவசமும் அணியத் தேவையில்லை என்றும் சுகாதார அமைச்சு அறிவித்திருக்கின்றது.

ஆனால் உலகின் பல நாடுகளதும் நிலைமைகளை அவதானிக்கும் போது முகக்கவசம் அணிய வேண்டிய கட்டாயப்படுத்தலை நீக்குவதற்கு பொருத்தமான நேரம் இதுவல்ல என்பதுதான் மருத்துவர்களின் கருத்தாகும்.

ஏனென்றால் இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தல் உலகில் இன்னும் முற்றுமுழுதான கட்டுப்பாட்டை அடையவில்லை. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் மாத்திரமல்லாமல், வேறு சில நாடுகளிலும் இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் அந்நாடுகளும் இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான விதிமுறைகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளன.

அதேநேரம் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எரிபொருள் பற்றாக்குறை நிலவும் இச்சூழலில் பொதுப்போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் மிகுந்த நெரிசலுடனும், நின்ற நிலையிலும் பயணிக்க வேண்டிய நிலைக்கு பயணிகள் தள்ளப்பட்டுள்ளனர். இது இத்தொற்று உள்ளிட்ட சுவாசத்தொகுதித் தொற்று நோய்கள் மிக வேகமாகப் பரவுவதற்கான சாதகமான சூழ்நிலையாகும்.

மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் முக்கிய மருந்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடுகள் நிலவுவதாக மருத்துவ துறையினர் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில் முகக்கவசம் அணிவதைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதன் மூலம் கொவிட் 19 தொற்று உள்ளிட்ட சுவாசத் தொகுதித் தொற்று நோய்களை தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்விடயத்தில் மக்கள் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது அவசியம். தவறும் பட்சத்தில் கொவிட் 19 தொற்று உள்ளிட்ட தொற்று நோய்கள் மீண்டும் தூக்குவதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

குறிப்பாக 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவில் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று, குறுகிய காலப்பகுதியில் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 2020 முதல் 2022 ஜுலை வரையும் 55 கோடியே 41 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைப் பாதித்துள்ள இத்தொற்று, இக்காலப்பகுதியில் 63 இலட்சத்துக்கும் மேற்பட்டோரின் உயிரிழப்புக்கும் காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறு பெரும் அச்சுறுத்தல் மிக்கதாக விளங்கி வந்த இத்தொற்றின் தாக்கத்தை பலவீனப்படுத்தியதில் இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான தடுப்பூசி முக்கிய பங்களித்திருக்கின்றது. அத்தோடு தொற்று தவிர்ப்புக்கான நடவடிக்கைகளும் பெரிதும் உதவியுள்ளமையும் மறுப்பதற்கில்லை.

2020 டிசம்பர் 08 ஆம் திகதி முதல் இத்தடுப்பூசி பாவனைக்கு வந்தது தொடக்கம் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டன. அதற்கு ஏற்ப 2021 பிற்பகுதி முதல் இத்தொற்றின் தாக்கம் இலங்கை உட்பட உலகின் பலநாடுகளிலும் பெருவீழ்ச்சி கண்டதோடு, அது தொடர்பான அச்சமும் மக்கள் மத்தியில் இருந்து நீங்கத் தொடங்கியது. ஆனால் கடந்த சில வாரங்களாக வெளியாகும் செய்திகளும் தகவல்களும் மீண்டும் இத்தொற்று தூக்குமா என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆகவே கொவிட் 19 தொற்று உள்ளிட்ட தொற்று நோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு முகக்கவசம் அணிவது பெரிதும் உதவியாக இருக்கும். இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவே இன்றைய தேவையாகவும் விளங்குகிறது எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் வேலைவாய்ப்புக்காக முதல்வரின் புதுமுயற்சி





தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதிலிருந்தே, முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையானது யூ.என்.எச்.சி.ஆர், தொண்டு நிறுவனங்கள் மற்றும் சென்னை சமுதாயக் கல்லூரியுடன் இணைந்து, 'திறன்களின் சங்கமம்' என்ற வேலைவாய்ப்பு முகாம் மற்றும் விளையாட்டுத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியைஅண்மையில் சென்னை எழும்பூரில் நடத்தியது.

வெளிநாடுவாழ் தமிழர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, வெளிநாடுவாழ் தமிழர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.



வேலைவாய்ப்பு, விளையாட்டுத் துறை, கல்வி மற்றும் இலக்கியம் ஆகிய மூன்று துறைகளிலும் சிறந்து விளங்கும் மறுவாழ்வு முகாம் மக்களுக்கு ஏற்ற வாய்ப்புகளைப் பெருக்கிடவும், தகுந்த ஆலோசனை வழங்கி அவர்களை வழிநடத்திடவும் புதிய முயற்சியாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானோர் பெயின்டர், எலக்ட்ரீஷியன் போன்ற சிறுசிறு வேலைவாய்ப்புகளை மட்டுமே பெற்று வருகிறார்கள். அவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு கோர்ப்பரேட் நிறுவனங்களிலும் பணிவாய்ப்பினைப் பெறுவதற்கு ஓர் வாய்ப்பாக இந்த 'திறன்களின் சங்கமம்' நிகழ்ச்சி அமைந்தது.

### 'திறன்களின் சங்கமம்'

இந்நிகழ்ச்சியில், தமிழகத்திலுள்ள 72 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களிலிருந்து பலரும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் சீக்கெம், பஹ்வான் சைபர் டெக், ப்ரூடில், கெவின்கேர், கிரீன்ட் ரென்ட்ஸ், டீம்லீஸ், ஸ்போர்ட்ஸ் மெக்கானிக்ஸ், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் ஆகிய 8 நிறுவனங்கள் பங்கெடுத்து, தங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்காணல்களை நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தேர்வு பெற்ற 14 பேரில் 6 பேருக்கு அன்றைய தினமே கெவின்கேர் நிறுவனத்தில் தொழில் வாய்ப்பு உறுதி செய்யப்பட்டது. மேலும் 37 பேர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று அடுத்தகட்ட நேர்காணலில் வேலைவாய்ப்பைப் பெறவுள்ளனர்.

இந்த முகாமில், வேலைவாய்ப்பு வழங்குவதோடு மட்டுமல்லாமல். விளையாட்டுத்துறையில் சாதித்தவர்களுக்கு அத்துறையின் வல்லுநர்களைக் கொண்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அவர்களின் வெற்றியை மேலும் தொடர அடுத்தகட்டமாக என்னென்ன செய்ய வேண்டும், உடல் திறனைப் பேணுவதற்கு எவ்வகையான உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

கலைத்துறையில் சாதித்த இலங்கைத் தமிழர்களை அழைத்து வந்து, அவர்கள்மூலமாக கலை நிகழ்ச்சிகளை நடத்த வைத்து அவர்களின் திறனைப் பலரும் அறியும்படி செய்தார்கள். வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை, தகுதிக்கேற்ற வேலையைப் பெற்றுத்தர வேண்டுமென்றும், அதன் மூலம் முகாம்களில் வசிக்கும் மற்ற இளைஞர்களும் நல்ல உத்வேகத்தைப் பெறுவார்கள் என்றும் துறை ஆணையர் தெரிவித்தார்.

**தெ.சு.கவுதமன்...**

# ஹற்றன் மாணவன் உயர்கல்வியைத் தொடர டிக்கோயா ரோட்டறி கழகம் வழங்கிய உதவி

ஹட்டனில் வசிக்கின்ற கிருஷ்ணசாமி சர்தாசன் என்ற மாணவனுக்கு அவருடைய பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதற்காக டிக்கோயா ரோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் 60000.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகையானது மாதாந்தம் 5000.00 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை லண்டனில் வசிக்கின்ற யோகேஸ்வரன் மற்றும் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் உறுப்பினர் சிதம்பரம்பிள்ளை சப்பானி ஆகிய இருவரும் இணைந்து டிக்கோயா ரோட்டறி கழகத்திற்கு வழங்கியுள்ளனர்.

டிக்கோயா ரோட்டறி ஊடாக மாதாந்தம் குறித்த மாணவனுக்கு 5000.00 ரூபா வீதம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் இரண்டு மாதங்களுக்கான தொகையான 10000.00 ரூபாவை அண்மையில் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு மற்றும் உறுப்பினர்களான டொக்டர் சந்திரராஜன் சோமசுந்தரம் ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரி ஆசிரியர் சத்தியமூர்த்தி ஆகியோர் இணைந்து குறித்த மாணவனின் தாயாரிடம் கையளித்தனர். இவ்வாறான முன்மாதிரியான சேவை குறித்து பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**நுவரெலியா தினகரன் நிருபர்**



# இனஐக்கிய சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்ட நாச்சியாதீவு வில்லுப்பாதை

அநுராதபுரம் மாவட்டத்தின் நாச்சியாதீவு இஹலவெவ பகுதியில் சேனைப் பயிர்ச் செய்கை போன்ற விவசாய நடவடிக்கைகளே இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக இருந்தாலும் மாடு, ஆடு, கோழி வளர்ப்பு, பாய் இழைத்தல் போன்ற குடிசைக் கைத்தொழில்களும் இங்குள்ள மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சிலர் கூலித் தொழிலையே தமது ஜீவனோபாய தொழிலாக இன்றும் மேற்கொண்டு வருகின்றனர்.



இங்கு பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இனங்களுக்கிடையில் இல்லாமல் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இதற்குக் காரணம் இஹலவெவ விகாரையின் விகாராதிபதியும் அதை சூழவுள்ள மக்களும் ஆவர்.

நாச்சியாதீவு முஸ்லிம் மக்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் இங்குள்ள சிங்கள மக்கள் முஸ்லிம்களின் சுகதுக்கங்களிலும், இப்பகுதியில் வசிக்கும் முஸ்லிம்கள் இங்குள்ள சிங்கள இன மக்களின் சுகதுக்கங்களிலும் பங்கெடுத்து வருகின்றனர்.

நாச்சியாதீவு இஹலவெவ மக்களின் பிரதான போக்குவரத்து பாதையாக நாச்சியாதீவு வில்லுப் பாதை உள்ளது.இப்பாதையின் ஊடாகவே இப்பகுதிகளில் உற்பத்தியாகும் மரக்கறி வகைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள் அனைத்தும் விற்பனைக்காக தம்புள்ள மற்றும் அநுராதபுரம் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

அத்துடன் சூழவுள்ள அநேக கிராமிய பிரதேச மக்களின் போக்குவரத்துப் பாதையாகவும் இப்பாதை திகழ்கின்றது. இப்பாதையின் அருகில் பற்றைக் காடுகள் வளர்ந்து போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலை உண்டு பண்ணி வருகின்றன. அத்துடன் கள்வர்கள் நடமாட்டமும் அண்மைக் காலமாக இப்பகுதியில் அதிகரித்திருப்பதும் ஒரு பிரச்சினையாக உள்ளது.



இவற்றை உணர்ந்த இஹலவெவ விகாரையின் விகாராதிபதி மற்றும் நாச்சியாதீவு பள்ளி பரிபாலன சபையினர், ஊரின் முக்கியஸ்தர்கள், நலன் விரும்பிகள் இணைந்து இப்பாதையில் பல்லின மக்கள் பங்களிப்புடன் சிரமதான பணியொன்றை மேற்கொண்டனர்.

இப்பாதை துப்புரவு செய்யப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்து மக்களும் செயற்பட்டனர். சமூக சேவையாளர் ஏ.எம்.சல்மானின் பூரண பங்களிப்புடன் விகாராதிபதி தலைமையில் இப்பகுதில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டு வீதியின் இரு மருங்குகிலும் மண்டிக் கிடந்த பற்றைகள் அகற்றப்பட்டன. இதற்கு வியாபாரிகள் மற்றும் வாகன சொந்தக்காரர்கள் பங்களிப்பு செய்தனர்.

இப்பிரதான பாதை துப்புரவு செய்யப்பட்டதன் விளைவாக இப்பாதையில் பிரயாணம் மேற்கொள்பவர்கள் எவ்வித பயமோ அச்சமோ இன்றி பிரயாணம் மேற்கொள்கின்றனர். தமது உற்பத்திப் பொருட்களை இலகுவாக சந்தைக்கு கொண்டு செல்ல முடிவதாக மக்கள் கூறுகின்றனர்.



**ஏ.ஆர்.எம்.ரபியூதீன்...**
*(திறப்பனை தினகரன் நிருபர்)*

# விஜயகாந்தின் உடல்நிலையில் பாதிப்பு இருப்பதை ஒப்புக் கொண்ட பிரேமலதா

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தின் உடல்நிலையில் சற்று தொய்வு இருப்பது உண்மைதான் என்று அக்கட்சியின் பொருளாளரும், மனைவியுமான பிரேமலதா தெரிவித்துள்ளார். விஜயகாந்த் கடந்த ஜூன் 14 ஆம் திகதி சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து நீரிழிவு பிரச்சினை காரணமாக விஜயகாந்தின் கால்விரல் அகற்றப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியது. இது தே.மு.தி.மு.க தொண்டர்கள் மற்றும் விஜயகாந்த் ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



'கப்டன் விஜயகாந்த்திற்கா இந்த நிலைமை' என்று சமூக வலைதளங்களில் சோகத்தை வெளிப்படுத்தினர். அத்தோடு, மீண்டும் பழைய விஜயகாந்தாக வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதாக பதிவிடப்பட்டது. இது தொடர்பாக தே.மு.தி.க தலைமை வெளியிட்ட அறிக்கையில், 'நீண்ட ஆண்டுகளாக இருக்கும் நீரிழிவு பிரச்சினையால் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தின் வலதுகாலில் உள்ள விரல் பகுதியில் இரத்த ஓட்டம் சீராக இல்லாததால், மருத்துவர்களின் ஆலோசனைப்படி விரல் அகற்றப்பட்டது. மருத்துவர்கள் கண்காணிப்பில் அவர் நலமுடன் இருக்கிறார். மேலும், மருத்துவர்களின் ஆலோசனைப்படி தொடர்ந்து விஜயகாந்துக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. விஜயகாந்த் உடல்நிலை குறித்து சமூக வலைதளங்களில் பரவும் பொய்யான வதந்திகளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் யாரும் நம்ப வேண்டாம்' என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பிரேமலதாவிடம் விஜயகாந்த் உடல்நிலை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், "தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் உடல்நிலையில் சற்று தொய்வு இருப்பது உண்மைதான். 10 நாட்களுக்கு ஒருமுறையோ, மாதத்திற்கு ஒருமுறையோ மருத்துவர்கள் அறிவுறுத்தலின் பேரில் விஜயகாந்த்தை தொடர்ந்து பரிசோதனைக்கு அழைத்து செல்கிறோம். அப்படி மருத்துவப் பரிசோதனைக்கு செல்வதை பெரிதுபடுத்த வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார்.

# வெப்பத்தில் தகிக்கும் திருமேனிக்கு, ஆனியில் திருமஞ்சனம்



சிதம்பரத்தில் ஆடும் ஆனந்தத் தாண்டவம், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழிலையும் உணர்த்துகிறது. சிதம்பரத்தில் நடராஜருக்கு வலப்பக்கத்தில் சிதம்பர ரகசியம் உள்ளது. இதேபோல், திருவாரூரில் தியாகராஜர் திருமேனியே ரகசியம் கொண்டது. இந்த இரண்டு பெருமான்களின் நடனத்தையும் பதஞ்சலி முனிவரும் வியாக்ரபாத முனிவரும் தரிசிப்பதாக ஐதீகம். ஸ்ரீ நடராஜரையும், அன்னை ஸ்ரீசிவகாமியையும் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளச் செய்வார்கள். அங்கே அவருக்கு திருமஞ்சனம் எனப்படும் அபிஷேகங்கள் நடைபெறும். பிறகு இருவரும் ஆனந்த நடனம் புரியும் அற்புத காட்சியைத் தரிசிப்பார்கள் பக்தர்கள். ஆனந்த நடனம் ஆடியபடியே, சித்சபையில் எழுந்தருள்வார்கள். இதைக் காணக் கண்கோடி வேண்டும்!

ஆனியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கும். வைகாசியில் அக்னி நட்சத்திர காலம் முடிந்து, வெப்பத்தில் தகிக்கும் திருமேனிக்கு, ஆனியில் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. ஆண்டாண்டு காலமாக, ஆனியில் நடைபெறும் திருமஞ்சனத் திருவிழாவைத் துவக்கி வைத்தவர் யோக சூத்திரத்தை நமக்கு அருளிய பதஞ்சலி மகரிஷி. நடராஜருக்கு நடைபெறும் ஆனித் திருமஞ்சன தரிசனத்தைக் காண்பதால் பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாகவும் தம்பதிகளுக்கு சுகமான வாழ்வும் கிடைப்பதாகவும், கன்னிப் பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடைபெறும் என்றும் ஆண்களுக்கு மனதில் தைரியமும், உடல் பலமும், வளமும் கூடும் என்பது நம்பிக்கை.

திருமஞ்சனம் என்றால் மங்கள ஸ்னானம். அதாவது மங்கள நீராட்டு என்று பொருள். சாதாரணமாக குளியலுக்கு காரகர் நீர் ராசி அதிபதியான சந்திரன் ஆகும். ஆனால் திருமஞ்சனம் என்பது பலவித வாசனை பொருட்கள் மற்றும் குளிர்விக்கும் பொருட்களை கொண்டு செய்யப்படுவதால் திருமஞ்சனத்தின் காரகர் சுக்கிரன்தான்.

ஆனி மாத உத்திர நட்சத்திர நாளில் தேவர்கள், ஆடலரசனுக்குப் பூஜைகள் செய்வதாக சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. அந்த நன்னாளே ஆனித் திருமஞ்சனத் திருவிழா. ஈசனின் திருநட்சத்திரம் திருவாதிரை. மிக உஷ்ணமான நட்சத்திரம் இது. தவிர, ஆலகாலம் உண்ட நீலகண்டன் அல்லவா ஈசன். சாம்பல் தரித்தவன். அக்னியை ஏந்திக் கொண்டிருப்பவன். ஆக மொத்தம் உஷ்ணாதிக்கத்துடன் இருப்பவன். எனவே, அவனுக்குக் குளிரக் குளிர அபிஷேகம் செய்யச் சொல்கிறது ஆகம விதி. இதனால்தான் சிவபெருமானை அபிஷேகப் பிரியன் என்று கொண்டாடுகிறோம். பால், தயிர், பன்னீர், பஞ்சாமிர்தம், நெய், சந்தனம், இளநீர் என 16 வகை குளிர்ந்த பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்கின்றனர்.

சிதம்பரம் நடராஜர் கோவிலில் மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனமும், ஆனி மாதத்தில் ஆனித் திருமஞ்சன தரிசனத் திருவிழாவும் சிறப்பாக பத்து நாட்கள் நடைபெறும். பங்குனி உத்திரத்தைப் போலவே ஆனியில் வரும் உத்திரமும் விசேஷம். இந்த ஆனி உத்திரமே, ஆடல்வல்லானுக்கான விழாவாக, ஆனித் திருமஞ்சன வைபவமாகப் போற்றப்படுகிறது.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### காரைக்கால் அம்மையார்



78

மகிழ்ச்சி அடைந்த புனிதவதியார் அதைக் கொண்டு வந்து, கணவன்கையிற் கொடுக்க; அவன் ஆச்சரியமடைந்து வாங்கினான். வாங்கிய பழத்தைப் பின் காணாதவனாகி, மிகுந்த பயங்கொண்டு, மனந் தடுமாறி, அப்புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து, அவரைப் பிரிந்து வாழவேண்டும் என்று துணிந்து, தன்கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல், அவரோடு தொடர்பின்றி ஒழுகினான்.

ஒழுகு நாளிலே, ஒரு மரக்கலஞ் செய்வித்து, தான் செல்ல விரும்பிய தேசத்திலே விரும்பப்படுகின்ற அரும்பண்டங்களை அதனிடத்து நிறைய ஏற்றி, சுபதினத்திலே சமுத்திரராஜனாகிய வருணனைத் தொழுது கொண்டு, மாலுமி முதலியோரோடும் ஏறி, அத்தேசத்தை அடைந்து,



வாணிகஞ்செய்து, சிலநாளான ன்பின், மீண்டும் அம்மரக்கலத்தில் ஏறி, பாண்டியநாட்டிலுள்ள ஓர் நகரத்தை அடைந்து, அங்குள்ள ஒருவைசியனுடைய மகளை விவாகஞ்செய்து கொண்டு, பெருஞ்செல்வத்தோடும் வாழ்ந்திருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே ஒரு பெண்குழந்தை பிறந்தது. அவன் தான்கூடி வாழ்தற்கு அஞ்சி நீங்கிய மனைவியாரைத் தான் வணங்கும் தெய்வமாகக்கொண்டு, அவருடைய புனிதவதியார் என்னும் பெயரையே அந்தப் பெண்ணிற்கு இட்டான்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## ஆறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19152) கோளத்தின் சுருக்கம் எது? **வட்டம்.**

(19153) இந்த பிரபஞ்சத்தின் சூட்சும ரகசியம் எதன் அடிப்படையில் அமைந்துள்ளது? **வட்டத்தின்**

(19153) தர்ஷன் என்றால் என்ன பொருள்? **மங்களகரமானது**

(19153) 'சக்ரா' என்றால் என்ன பொருள்?
**எப்பொழுதும் செயல்பாட்டில் இருப்பது என்று அர்த்தம்.**

(19154) எல்லா ஆயுதங்களைக் காட்டிலும் எப்பொழுதும் சுழன்று கொண்டிருக்கும் ஆயுதம் எது? **ஸ்ரீ சக்கரம்**

(19155) சாதாரணமாக சுதர்சன சக்கரம் கிருஷ்ணனின் எதில் காணப்படும்?
**சுண்டு விரலில்**

(19156) ஆனால் விஷ்ணுவோ எதில் வைத்துக் கொண்டிருக்கிறார்?
**ஆள்காட்டி விரலில்**

(19157) யார் மீதாவது ஏவும் பொழுது கிருஷ்ணர் எந்த விரலில் இருந்து ஏவுவார்?
**ஆள்காட்டி விரலில் இருந்து தான்**

(19158) எதிரிகளை அழித்த பின் சுதர்சன சக்கரம் என்ன செய்யும்?
**மறுபடியும் அதன் இடத்திற்கே திரும்பி விடுகிறது.**

(19159) சுதர்சன சக்கரம் ஏவப்பட்ட பிறகும் ஏவி விட்டவனின் கட்டளைக்கு அது கீழ்ப்படிந்து நடக்குமா?
**ஆம்**

(19160) எவ்வித அழுத்தமும் இல்லாத சூன்யப்பாதையில் செல்வதால் சுதர்சன சக்கரத்தால் எந்த இடத்திற்கும் எவ்வளவு நேரத்திற்குள் செல்ல முடிகிறது?
**கண்மூடி கண் திறக்கும் நேரத்திற்குள்**

(19161) ஏதாவது தடை எதிர்பட்டால். சுதர்சன சக்கரத்தின் வேகம் என்ன செய்யும்? **அதிகரிக்கும்.**

(19162) இதை என்னவென்று அழைப்பார்கள்?
'ஹரன்ஸகதி' என்பர்.



(19163) இது சுழலும் போது அது சத்தம் எழுப்புமா? **இல்லை.**


(19164 அதனுடைய வடிவம் எத்தகையது?
**சின்னஞ்சிறு துளசி தளத்தில் அடங்கக்கூடியது. அதே சமயம் இப்பிரபஞ்சம் அளவு பரந்து விரிந்தது.**

(19165) அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவது எது?
**சுதர்சன சக்கரமாகும்.**

(19166) சூட்சுமத்தின் ரகசியம் என்ன?
**வாழ்க்கை ஒரு வட்டம் என்பார்கள் அதாவது நாம் செய்யும் நன்மையும், தீமையும் நமக்கே திரும்ப வரும் அதுதான் சூட்சுமத்தின் ரகசியம்.**

## மட்டு. தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன் விழா கதவு திறத்தலுடன் ஆரம்பம்





மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் பேராலயத்திற்கு அருகில் அமைந்திருந்து அருள்பாலிக்கும் பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அம்மன் விழாவானது நாளை செவ்வாய்க் கிழமை (05.07.2022) கதவுதிறத்தலுடன் ஆரம்பமாக உள்ளது. தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன் நீண்ட வரலாற்றைக் கொண்டு விளங்கும் ஆலயமாகத் திகழ்கின்றது. செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் தொடர்பு பட்டதாகவும் அமைகின்றது; அதாவது செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருசடங்கினை செய்துவந்த கட்டாடி வம்சத்தின் தேற்றாத்தீவு பரம்பரை கட்டாடியே இங்கும் கண்ணகி அம்மன் விழாவினை பாரம்பரிய முறை மீறப்படாமல் நிகழ்த்தி வருகின்றமை பெருமிக்கதக்கவிடயமாகும்.

தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன் விழா கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக ஏழு தினங்கள் இடம்பெற்று ஏழாம் நாள் வாழிபாடலுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடதக்க விடயமாகும். அந்த வகையில் நாளை 05.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று கதவுதிறத்தலுடன் ஆரம்பித்து எதிர்வரும் (11.7.2022) திங்கட்கிழமை பின் இரவு வழிபாட்டுடன் நிறைவடையவுள்ளது. அந்தவகையில் ஏழு தினங்களும் ஏழு தெரு அடிப்படையில் அம்மன் விழாவானது இடம்பெறவுள்ளது.

தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன் விழாவானது பாரம்பரிய தோரண ஊர்வலத்துடன் ஆரம்பமாகி ஊர்வலத்துடனேயே நிறைவடைந்த பிற்பாடு அம்மன் விழாவின் பூஜை நடைபெறவுள்ளது. எிர்வரும் 09.07.2022 ஆம் திகதி ஐந்தாம் நாள் அன்று கலியாணச்சடங்கு இடம்பெறவுள்ளது. கண்ணகி அம்மன் விழா காலப்பகுதியில் அடியார்கள் மடிப்பிச்சை நெல் எடுத்தல், கற்பூரச்சட்டி ஏந்தல் போன்ற பல நேர்த்திக்கடன்களை செலுத்திவருவர்.

தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன் விழாவின் தோரண ஊர்வலத்தின் போது அம்மனின் திருவுருப்படம் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட தோரணத்தினை அடியார்கள் சுமர்ந்தவண்ணம் வருவர். காவடி, கரகம், கும்மி போன்ற இன்னோரன்ன கலை நிகழ்வுகளுடன் வீதி இருமருங்கிலும் நிறைகுடம் வைத்து அன்னையை வரவேற்க பக்தர்கள் காத்திருப்பார்கள்.

செ. ஸிந்தூரன் ...
தேற்றாத்தீவு

## நாதப் பிரம்ம யோகம் - 26



ஸ்வரங்களின் ஆரோகணமும் அவரோகணமும் சில குறியீடுகளால் குறிக்கப்பட்டு இறுதியாக அட்சரங்களாகவும், உயிர் எழுத்துக்களாகவும் மாற்றப்படும். இதன் மூல பல ஸ்வரங்களை மாற்றி மாற்றி அமைத்து அதன் மூலம் எழுப்பப்படும் இசையினால் பலவித உணர்ச்சிகள், எண்ணங்கள் அல்லதுமாறுபட்ட உணர்ச்சிகளை மனதில் எழுப்பமுடியும். இப்படித்தான் ஒருவனின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் மொழிகள் உருவாகின்றன.

இசை என்பது காதல், மகிழ்ச்சி போன்ற நல்ல உணர்ச்சிகளினை உருவாக்கும் ஒன்று மாத்திரமல்ல, அனைத்து விதமான உணர்ச்சிகளையும் உருவாக்க கூடியது. இந்தப் பணியை மனித குலத்தில் மொழி தோன்றுவதற்குப் பல காலத்திற்குமுன்னரே இசை செய்து வருகிறது. ஒருசிறுபெண் இயல்பாக அழுவதும் கூட ஒருவித இசையே. ஆபிரிக்கப் பழங்குடியினர் சிலர் உத்வேகமாக சிலதைச் சொல்ல வேண்டும் என்றால் இசையாக தமது சொற்களைச் சொல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். மொழி விருத்தியடைவதற்கு முன்னர் மனித குலத்தின் ஒரே தொடர் பாடல் ஊடகம் இசையே. மொழி விருத்தியடைய அதன் பழைய முறையான இசை தனது பிரபலத்தை இழக்கத் தொடங்கியது. எனினும் இன்றும் இசை கூட்டாக சந்தோஷத்தை அனுபவிக்க, இசை ஒரு ஊடகமாக பாவிக்கப்படுகிறது. தகுந்த இசைபோரின் போது படை வீரர்களின் உத்வேகத்தைபோர்க் காலங்களில் அதிகரிக்கப் பயன்படுகிறது. இதுவே இராணுவத்தில் நடனம், நாட்டுப் புறப் பாடல்கள், இசைக்குழு என்பவை இருப்பதற்குக் காரணம். மனிதகுலத்தின் வரலாற்றில் சந்தோஷம்,போர் என்பவற்றின் மிக முக்கியமான ஒன்றாக இசை இருந்திருக்கிறது.

இசை விழாக்களில் பாடகரோ, இசைக் கலைஞரோ பார்வையாளர்களுக்கு செய்தியைச் சொல்ல,உணர்ச்சிகளில் மாற்றத்தை ஏற்படுத்த, தீடீர் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடிவதை அவதானிக்கலாம். இதைச் செய்வதற்கு அவர்தனது ஸ்வரத்தை, வீச்சினை, வேகத்தினை, தாளத்தினைதனது இசையில் செய்வதைநாம் அவதானிக்கலாம். ஒரே சுருதியில் நடைபெறும் இசை சோர்வினையும், எந்த உணர்ச்சிகளையும் தூண்ட முடியாத ஒன்றாகவே இருக்கும். இது இசையின் இயல்பினைக் குறைக்கும். பொதுவான உரையடலில் குரலை உயர்த்தி, தாழ்த்திப் பேசுவதன் மூலம் சாதாரண உரையாடலை சுவாரசியமாகவும், அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற முடியும் என்பதை பலரும் அனுபவத் தில் அறிந்திருப்பார்கள். எவரொருவரும் விரிவுரையின் போது தனது குரலின் சுருதியையும், ஒலியின் அளவினையும் கூட்டிக் குறைக்காமல் சுவாரசியமான உரையினைத் தர முடியாது. ஆகவே சாதாரண உரையாடலின் வினைத் திறனான வெளிப்பாட்டிற்கு ஸ்வரம் அவசியமாகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால் உணர்ச்சிகளினதும், எண்ணங்களினதும் அலைகள் ஸ்வரத்தின் அடிப்படியிலேயே இயங்குகின்றது என்பதே. (தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்





முந்தல் ஸ்ரீதிரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் வியாழக்கிழமை (30) வெளிக்கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது பலர் கலந்து கொண்டனர்.
(உடப்பு குறூப் நிருபர்)

## அமெரிக்க முதலீடுகளை...

அமெரிக்கா ஒத்துழைப்பதன் அவசியத்தையும் இதன்போது அமைச்சர் நஸீர் அஹமட் வலியுறுத்தினார்.

உயிரியல் பல்வகைத்தன்மையால் சுற்றாடல்துறையில் ஏற்படும்

சமநிலைத்தளம்பலைக் கட்டுப்படுத்தி, சூழல் மாசடைதலைத் தடுப்பது பற்றி கலந்துரையாடிய அமைச்சர், காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் மூலோபாயங்களை தணிப்பதற்கான ஒத்துழைப்புக்களையும் கோரினார்.

மேலும், கைத்தொழில்துறையில் நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி, இலங்கை முதலீடுகளில் அமெரிக்காவின் கவர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் இதன்போது ஆராயப்பட்டது.

முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்திப்பில், சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் அமைச்சரின் ஆலோசகருமான கருணாசேன ஹெட்டியாராச்சி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## தங்க ... (03ஆம் பக்கத் தொடர்)

வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். கொழும்பு செட்டியார் தெருவில் இந்த வாரம் 24 கரட் ஒரு பவுண் தங்கம் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 22 கரட் தங்கம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையிலிருந்து... (03ஆம் பக்கத் தொடர்)

முருங்கன்பிட்டி பகுதியை சேர்ந்த பரமேஸ்வரி என்ற வயோதிப பெண், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் நள்ளிரவு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையில் 85க்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமரை விமர்சிக்காது ...

பழனி திகாம்பரம் தெரிவித்தார். தனியார் வானொலி ஒன்றில் ஒலிபரப்பான அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் தற்போது சர்வாதிகார ஜனாதிபதியே ஆட்சியில் இருக்கின்றார். தன்னை நம்பி வாக்களித்த 69 இலட்சம் மக்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஏமாற்றியுள்ளார். அவருக்கு முழு அதிகாரமும் இருந்தும் அவர் நாட்டை முன்னேற்றாமல் நாட்டை சீரழித்துவிட்டார்.

# சர்வகட்சி அரசு அமைந்தால் ஆதரவு வழங்க தயார்

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரையும் சுதந்திரமாகச் செயற்பட விட்டிருக்கமாட்டார்.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய உடன் பதவி விலக வேண்டும். அவர் பதவி விலகிய பின்னர் சர்வகட்சி அரசு அமைந்தால் அதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் மட்டுமல்ல அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியினரும் ஆதரவு வழங்குவார்கள்.

இதை இரு கட்சிகளின் தலைவர்களும் வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்கள் என்றும் திகாம்பரம் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவிலிருந்து 40,000... (03ஆம் பக்கத் தொடர்)

நிலையங்களுக்கும் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும், அமைச்சர் குறிப்பிட்டார். இந்திய அரசாங்கத்தினால் எமது நாட்டுக்கு வழங்கப்படும் மொத்த 50,000 மெற்றிக் தொன் உரத்தில் 40,000 மெற்றிக் தொன் நெல் விவசாயிகளுக்கும் எஞ்சிய 10,000 மெற்றிக் தொன் மக்காச்சோள விவசாயிகளுக்கும் வழங்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

## வினாத்தாள் திருத்தும்... (03ஆம் பக்கத் தொடர்)

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் ஆசிரியர்கள் திருத்த நடவடிக்கைகள் இடம் பெறும் மத்திய நிலையத்திற்கு வருவதில் எதிர்கொள்ள நேர்ந்துள்ள அசௌகரியங்கள் காரணமாக அந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம். டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியினால் போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை தொடர்பாக ஆசிரியர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் தமக்கு அறிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதன் காரணமாகவே கல்வி பொது தராதர சாதாரண பரீட்சை வினாத்தாள் திருத்தும் நடவடிக்கைகளை தற்காலிகமாக ஒத்திப்போடுவதற்கு தீர்மானிள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாத்தியமான எல்லா ... (03ஆம் பக்கத் தொடர்)

ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான இலங்கையின் தளராத ஆதரவை உறுதியளித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நிதி உதவி மற்றும் இலங்கையின் கடனை மறுசீரமைத்தல் (சீர்திருத்தம் செய்தல்) மற்றும் மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தூதுவருக்கு அவர் விளக்கினார்.

இலங்கைக்கு சாத்தியமான எல்லா வகையிலும் உதவிகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் இலங்கையுடன் தொடர்ந்தும் ஈடுபடும் என தூதுவர் குய் உறுதியளித்தார்.

## இந்திய வர்த்தக நிறுவன... (03ஆம் பக்கத் தொடர்)

விரைவில் கடவுச்சீட்டு வழங்கப்படும் என்றும் , ஒருநாள் சேவையில் இவற்றை வழங்குவதற்கு பிரத்தியேக கரும பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே (02) சனிக்கிழமை இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுக்கு 5 வருட வீசா , அமைச்சர் தம்மிக பெரேராவினால் கையளிக்கப்பட்டது.

இதற்கு வரவேற்பு தெரிவித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

## ஒரு நாள் கடவுச்சீட்டு வழங்கல்...

அதன் ஆரம்பக் கட்டமாக ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திலும் முன்கூட்டியே நாளொன்றையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொண்ட விண்ணப்பதாரிகள் 10 பேருக்கு மாத்திரம் இந்த சேவை வழங்கப்படும்.

மாத்தறை, வவுனியா மற்றும் கண்டி ஆகிய பிராந்திய அலுவலகங்கள் மூலம் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போது விண்ணப்பதாரிகளுக்கு நாட்கள் மற்றும் நேரங்கள் வழங்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கும் சேவைகளை வழங்க வேண்டியுள்ளது.

எனவே, அந்த அலுவலகங்களில் விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு முன்கூட்டியே நாளையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ளாதவர்கள் சமூகமளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள எதிர்வரும் 60 நாட்களுக்கான காலப்பகுதிக்கு திகதியும் நேரமும் ஒதுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.

எனவே அவசரமாக தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லவுள்ள விண்ணப்பதாரிகள் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களை 070 6311711 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு வட்ஸ்அப் மூலம் அனுப்ப வேண்டும். குறித்த இலக்கத்துக்கு அனுப்பி வைத்த பின்னர் விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு விரைவில் நாளொன்றும் நேரமும் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் உண்மை தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே துரிதமாக நாளொன்றும் திகதியும் வழங்கப்படும் என்றும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## நிலப்பகுதிகளுக்குள்...

வந்தடைந்துள்ளதுடன், இதன் காரணமாக குறித்த வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. சில பகுதிகளில் கடற்கரையோரம் அமைக்கப்பட்டிருந்த வீடுகள் சேதமடைந்துள்ளதோடு மரங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.வீதிகளில் கற்களும் மணலும் நிறைந்துகாணப்படும் நிலையில் குறித்த வீதிகளூடாக அவதானமாக பயணிக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புத்தளத்தில் இருந்து கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், குறித்த கடல் பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 முதல் 70 கிலோமீட்டர் வரை அதிகரித்து வீசக்கூடும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலபகுதிகளில் 100 கிலோமிட்டர் வேகத்தில் காற்று வீசலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் கடல் அலைகள் 2.5 அல்லது 3.5 மீற்றர் வரை எழும்புவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடலில் விழுந்து... (03ஆம் பக்கத் தொடர்)

இந்த துரதிர்ஷ்டவசமான விபத்து ஏற்பட்டதாக அறிய வருகிறது.

மூன்று மாணவர்களும் பாரிய அலைகளால் தூக்கி வீசப்பட்டு கடலில் விழுந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். காணமல் போன மாணவர் குறித்து நேற்று (03) மாலை வரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. (பா)

## இன்று முதல்...

மூடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அது தொடர்பில் நேற்று கல்வியமைச்சு தெரிவிக்கையில்:

ஒரு வார காலம் விடுமுறை வழங்கப்பட்ட போதும் கல்வி நடவடிக்கைகளுக்காக இழக்கப்படும் இந்த ஒரு வார காலத்தை எதிர்வரும் பாடசாலை விடுமுறை காலத்தில் கல்வி நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்வியமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்வி செயலாளர்கள் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுடன் நேற்று ஸூம் தொழில்நுட்பம் ஊடாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்தது. கடந்த இரு வாரங்களாக பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகை தொடர்பில் கல்வி அமைச்சு மீளாய்வு செய்துள்ளதுடன் மின்சக்தி, எரிசக்தி அமைச்சானது எரிபொருள் பகிர்ந்தளித்தல் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிவித்தலையும் கவனத்தில் கொண்டு மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக கொழும்பு மாவட்ட மற்றும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

ஏனைய பாடசாலைகள் பாடசாலை அதிபர்களின் தீர்மானத்திற்கு இணங்க செயற்பட முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது. எவ்வாறெனினும் பல பாடசாலைகள் ஒன்லைன் மூலமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.(ஸ)

## அடுத்துவரும்...

தெரிவித்துள்ளார். இந்த கலந்துரையாடலின் போது நாட்டில் தற்போது பெரும் பிரச்சினையாக மாறியிருக்கும் எரிபொருள், எரிவாயு உட்பட சமகால பிரச்சினைகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியதாகவும் அறிய முடிகின்றது. இதன் போதே, எரிபொருள் பிரச்சினைக்கு இன்னும் 10 நாட்களில் தீர்வு பெற்றுத் தருவதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார். இவ் வாக்குறுதியை ஏற்றுக் கொண்ட பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் 10 நாட்களுக்கு பொறுமையாக இருப்பதாக கூறியுள்ளனர்.

## IMF இன் உதவியை....

ஊழலை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான சீர்திருத்தங்கள் இல்லாவிட்டால், மேலும் தோல்வியடைந்த முகாமைத்துவத்தையும் கட்டுப்படுத்த முடியாத கடன் நிலைமையையும் இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அக்குழு எச்சரித்துள்ளது.

## அமெரிக்க இராஜாங்க...

நவம்பரில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள இலங்கை நட்பு நாடுகளிடம் கூடுதல் ஒத்துழைப்புகளை கோரி வருகின்றது.

இந்நிலையில் இலங்கையின் நெருக்கடி குறித்து அமெரிக்கா கூடுதல் அவதானம் கொண்டுள்ளமையை பிரதிபளிக்கும் வகையில் நாட்டின் உணவு பாதுகாப்பிற்காக 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அண்மையில் அறிவித்திருந்தார். ஜி 20 உச்சி மாநாட்டில் கலந்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி பைடன் இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

அதே போன்று வொஷிங்டனில் உள்ள இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்கவை ஜனாதிபதி பைடன் உட்பட இராஜாங்க செயலர் அண்டனி பிளிங்கன் ஆகியோரும் சந்தித்திருந்தனர்.

அந்த சந்திப்புகளின் போது இலங்கையின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு சாதகமான பதிலளிப்பே கிடைத்துள்ளதாக தூதுவர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அமெரிக்க திறைசேரியின் ஆசியப்பிராந்தியத்துக்கான பிரதி உதவிச்செயலர் ரொபேர்ட் கப்ரொத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச்செயலாளர் கெலி கெய்டெலிங் உட்பட உயர்மட்ட குழுவினர் கடந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுபலதரப்பட்டசந்திப்புகளில் கலந்துக்கொண்டிருந்தனர்.

இதன் போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கை அமெரிக்க கூட்டுத்திட்டங்கள் மற்றும் ஒத்துழைப்புக்கள் விஸ்தரிப்பு உள்ளிட்ட பரந்துபட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தனர். இந்த குழுவினர் தற்போது வோஷிங்டன் திரும்பியுள்ள நிலையில் இலங்கைக்கான அமெரிக்க ஒத்துழைப்புகள் குறித்து முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்படலாம் என அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இராஜாங்க செயலர் அண்டனி பிளிங்கனின் இலங்கை விஜயம் தொடர்பான திகதி விபரங்களும் கூடிய விரைவில் அறிவிக்கப்படலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மின்சாரம் துண்டிப்பால் ...

தெரியவந்துள்ளது. இதன்போது அந்த குழுவினர் சுமார் 20 நிமிடத்திற்கு மேல் லிப்டில் சிக்கிக் கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த நேரத்தில் வைத்தியசாலையின் ஜெனரேட்டர் இயங்காத காரணத்தினால் இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

## ஹஜ் குழுவினர் நேற்று...

இக்குழுவில், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், முஸ்லிம் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் சாஹிப் அன்ஸார் மற்றும் ஹஜ் குழுத் தலைவர் அஹ்கம் உவைஸ் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர்.

மூன்று வருடங்களின் பின்னர், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கை முஸ்லிம்களுக்கு புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக மற்றும் அரசாங்கத்துக்கும் அமைச்சர் நஸீர் அஹமட் நன்றி தெரிவித்துள்ளார். இரண்டு வருடங்களின் பின்னர், உலக முஸ்லிம்கள் பரந்தளவில் ஹஜ் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திய சவூதி அரேபிய அரசாங்கத்துக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

ஜித்தா சென்ற மேற்படி குழுவினரை தூதுவர் ஹம்ஸா வரவேற்றார்.

## 19 ஆவது திருத்தத்தை...

இந்த திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு இதனை விட சிறந்த யோசனையொன்றை முன்வைத்து 150 பெரும்பான்மை பலத்தை பெற யாராவது தயார் என்றால் அவருக்கு நீதி அமைச்சு பதவியை கையளித்து விட்டு செல்ல தயாராக இருப்பதாக நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். தற்போதைய நிலையில் தேர்தல் நடத்தக் கூடிய சூழல் இல்லாத நிலையில் அனைவரும் புதிய திருத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிய அவர் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

22 ஆவது திருத்தம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்று ஸூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று நடைபெற்றது இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

150 எம்.பிகளின் ஆதரவு இருந்தாலே 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியும். பொதுஜன பெரமுன எம்.பிகளினதும் ஆதரவை பெறும் வகையில் சில இடைக் கால ஏற்பாடுகளும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளது. இதனை விட மாற்றங்கள் செய்து தங்களால் 150 பெரும்பான்மை பெற முடியும் என யாராவது முன்வந்தால் நீதி அமைச்சர் பதவியை அவருக்கு விட்டுக் கொடுக்க தயாராக இருக்கிறேன்.

22 ஆவது திருத்தம் 19 ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சபைக்கு பிரதமர் ,சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவி வழியாக தெரிவாவர். ஜனாதிபதியின் பிரதிநிதி, பிரதமரின் பிரதிநிதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி ஆகியோரும் இதில் உள்ளடக்கப்படுவர். பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து மூவரை தெரிவு செய்யும் யோசனை மாற்றப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு சார்பில் ஒருவரும் பிரதான எதிர்க்கட்சி சார்பில் ஒருவரும் ஏனைய சிறுகட்சிகள் சார்பில் ஒருவரும் தெரிவு செய்யப்படுவர். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் அமைச்சர் தொகை 30 ஐ தாண்டாது போன்ற முக்கிய யோசனைகள் இதில் உள்ளன என்றார்.

22 ஆவது திருத்தமானது 19 என எதிரணிகள் குற்றஞ் சாட்டுவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், இது 19+ ஆக முன்னோக்கி செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளியன்று சுகவினருடன் பேசினேன். அவர்களின் சந்தேகங்களை தீர்த்தேன். தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

இந்த பணி நிறைவடைந்த பின்னர் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். சகல கட்சிகளையும் உள்ளடக்கிய தெரிவுக் குழு அமைத்து மக்களின் கருத்துக்களை பெற்று இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ரொமேஷ் டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு குழுவின் பரிந்துரையையும் ஆராய்ந்து புதிய யாப்பிற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டுவந்து நீக்குவது சாத்தியமானதல்ல. நான் எந்தத் தலைவரையும் பாதுகாக்கும் வகையில் செயற்படவில்லை.அதனால் அனைவரும் இணைந்து புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். 22 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு பெற சகல கட்சிகளையும் சந்திக்க இருக்கிறேன் என்றும் தெரிவித்தார். (பா)

## தனியார் பஸ் சேவைகள்...

சேவையை தொடர்ந்து கொண்டு செல்லும் நோக்கில் தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களில் எரிபொருளை வழங்குமாறு அரசாங்கம் இதற்கு முன்னர் அறிவுறுத்தியது. எனினும் இலங்கை போக்குவரத்து சபையின் சில பிரதேச டிப்போக்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்படுவதோடு சில இடங்களில் எரிபொருள் வழங்க மறுக்கப்படுவதாக மேற்படி சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார். எனினும் முழுமையான அளவில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5 வீதத்திற்கும் குறைவான பஸ்களே தற்பொழுது சேவையில் ஈடுபட்டு வருவதாக அறிய வருகிறது.

## ஜெக்சன் பயணித்த...

தடவைகள் யானை காரின் மீது விழுந்துள்ளதோடு வாகனமும் பலத்த சேதமடைந்தது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜெக்சன் அந்தனி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அநுராதபுரம் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற தொலைக்காட்சி நாடகம் ஒன்றின் படப்பிடிப்பில் கலந்து கொண்டு அநுராதபுரத்திற்கு திரும்பும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

படுகாயமடைந்த ஜெக்சன் அந்தனிக்கு இன்று 34 மணி நேர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட இருப்பதாக அறிய வருகிறது. (பா)

## ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில்....

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய எண்ணெய் நிறுவனத்தின் ஊடாக 5 கப்பல்கள் வர உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜூலை 15, 17 க்கு இடையில் ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் மற்றொரு டீசல் கப்பல் வர உள்ளது. ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முதலாவது பெற்றோல் கப்பல் ஜூலை 22ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை இலங்கைக்கு வரவுள்ளது. மலேசியாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் பெறுவதற்கு சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலையை நிவர்த்திக்கும் வகையில் எதிர்வரும் 10 நாட்களுக்குள் மூன்று எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையும் என எரிசக்தி, மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதற்கிணங்க எதிர்வரும் 8 அல்லது 9ஆம் திகதியில் ஒரு டீசல் கப்பலும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 11 மற்றும் 14ஆம் திகதிகளில் மேலும் இரு எரிபொருள் கப்பல்களும் நாட்டை வந்தடையும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் எரிசக்தி மின்சக்தி அமைச்சில் நடைபெற்றுள்ள செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதேவேளை,ஐஓசி நிறுவனத்திற்கு சொந்தமான டீசல் கப்பல் ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பல் 15 ஆம் திகதிக்கும் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்தில் நாட்டை வந்தடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதை வேளை, எதிர்வரும் 10ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பதாகவோ பெற்றோல் கப்பல் ஒன்றை நாட்டிற்கு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது தொடர்பில் மூன்று நிறுவனங்களோடு ஆவணப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறுகிய கால மற்றும் நீண்ட காலத்தில் பலன் கிடைக்கும் அனைத்து வகையான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டு வருவதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் உள்ள 400 உயர் அதிகாரிகளும் அவர்களின் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, எரிபொருள் வரிசையில் இருப்பவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காகவே டோக்கன் வழங்கப்பட்டதாகவும், புதிதாக எரிபொருள் வரிசைக்கு வருபவர்களுக்கு டோக்கன் வழங்கும் நோக்குடன் இந்த திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவித்த அவர், அடுத்த எரிபொருள் கப்பல்கள் வந்தவுடன் ஏதேனும் ஒரு முறைமையில் மக்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.எனவே, பொதுமக்கள் தயவு செய்து வரிசையில் காத்திருக்க வேண்டாம் எனவும், அவ்வாறு காத்திருப்பதாலேயே கறுப்பு சந்தையில் 1500 ரூபா வரையில் பலர் பெற்றோல் விற்பனையில் ஈடுபடுவதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபைக்கு முறையாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், எந்தவொரு காரணத்திற்காகவும் 3 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக மின்வெட்டு அமுல்படுத்த வேண்டாமென தான் மின்சாரசபை தலைவருக்கு கோரியுள்ளதாக தெரிவித்த அவர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் மின்வெட்டை அமுல்படுத்தாமல் மக்களுக்கு மின் தடையை ஏற்படுத்தாமல் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்தும் சிந்தித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

## பிரதமர் பதவியை...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் பிரதமர் பதவியை ஏற்க மாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மந்தநிலையில் இருந்து இலங்கையை மீட்பதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு திறமையும் அறிவும் இல்லை என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

எனவே அனைத்து ஆளும்கட்சியை சேர்ந்த அமைச்சர்களும் பதவி விலகுமாறு மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார். அத்தோடு அரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்து அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## கொவிட் தொற்று ...

பதிவாகியுள்ளனர்.

**# மீண்டும் கொவிட் அபாயம்**

மீண்டும் கொவிட் தொற்று சமூகத்தில் பரவும் அபாயம் காணப்படுவதாகவும், சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுமாறும் கோரப்பட்டுள்ளது. இதுவரையில் கொவிட் நான்காம் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் அதனை ஏற்றிக் கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

இதுவரையில் நாட்டில் மொத்தமாக சுமார் 64 லட்சம் கொவிட் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய சேவைகளுக்கு...

டொலர் பிரச்சினை காரணமாக கடந்த சில மாதங்களாக கேஸ் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதோடு குறைந்தளவான சிலிண்டர்களே சந்தைக்கு விநியோகிக்கப்படும் நிலையில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் எரிவாயு பெற தொடர்ந்தும் நீண்ட வரிசை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மலையக சிறுத்தைகளை பாதுகாக்க விஷேட வேலைத்திட்டங்கள் அமுல்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

மத்திய மலைநாட்டில் வாழும் சிறுத்தைகளை பாதுகாக்கும் வகையில் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக விஷேட வேலைத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் மத்திய மலைநாட்டில் மலைகள் மற்றும் வனப்பகுதிகளில் வாழும் சிறுத்தைகளை பாதுகாக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. சிறுத்தைகளை பாதுகாப்பது மற்றும் ஏனைய வன விலங்குகளை பாதுகாப்பது தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் 1000 முச்சக்கர வண்டிகள் மற்றும் 1000 கிராம சேவகர் காரியாலயங்கள், தோட்ட அலுவலகங்கள் மற்றும் ஏனைய அரச அலுவலகங்களில் சிறுத்தைகள் மற்றும் ஏனைய வனவிலங்குகளை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகளை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த சிறுத்தைகள் மற்றும் பிற வன விலங்குகள் பற்றிய தகவல்களை விரைவாகப் பெறுவதே இந்த திட்டத்தின் முதன்மையான நோக்கம் என்று வனவிலங்கு அதிகாரிகள் கூறுகின்றனர். சிறுத்தைகள் மற்றும் பிற வன விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளான போதைப்பொருள், பொறி வைத்தல், துப்பாக்கிச் சூடு அல்லது வேறு குற்றச் செயல்கள் ஏதேனும் பற்றி அறிந்தால் உடனடியாக வனவிலங்கு திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1992 இற்கு அழைப்பை எடுத்து தெரிவிக்குமாறு வனவிலங்கு திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

# சீரற்ற காலநிலையால் இருப்பிடங்களிலிருந்து மக்கள் வெளியேறும் நிலை



**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

மலையகத்தில் நேற்று (03) நிலவிய சீரற்றகாலநிலையால் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்திருந்தது. ஞாயிறு காலை முதல் கடும்மழையுடன் கூடிய பனிமூட்டங்களும் காணப்பட்டன.

ரொசல்ல ஹைய்றீ தோட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மழை நீர் வீடுகளுக்குள் புகுந்ததால், வீட்டில் வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். வட்டவளை நகரத்திற்குட்பட்ட பகுதியிலும் கடும்மழை பெய்ததால்,ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. இதனால், ஆற்றின் இருபுறங்களில் வாழ்ந்த மக்கள் மிக அச்சத்துடன் உள்ளனர்.

ஒருசில இடங்களில் சிறியளவான மண்மேடுகள் சரிந்து விழுந்ததுடன், போக்குவரத்துக்கள் சீர் குலைந்தன. மேலும் தொடர்ச்சியான மழைபெய்யுமாக இருந்தால் மண்சரிவு ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் அதிகரிக்குமெனவும் அஞ்சப்படுகிறது.

பிரதான வீதிகளில் மூடுபனி காணப்பட்டதால், வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மிக அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – நுவரெலியா**

**2022ஆம் வருடம்**

2022ஆம் வருடத்தில் ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டப் பிரேரணையில் ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினால் ஒதுக்கப்பட்ட மானியத்தின் கீழ் நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குத் தேவையான பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்**

| இல. | விடயம் | மீளளிக்கப் படாத வைப்புக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|
| 01 | அலுவலக மேசைகள் மற்றும் அலுவலகக் கதிரைகள், கணனி மேசைகள் மற்றும் கணனி கதிரைகள், கடிதக்கோவை ராக்கைகள் | 2000.00 | 105 நாட்கள் | 1. பணமாக 1%<br>2. பணமாக அல்லாவிட்டால் 2% |
| 02. | கண்ணாடி அலுமாரிகள், உருக்கு அலுமாரி, கட்டில் மேசைகள் (பெட் டேபள்), ஹைபிரிட் கதிரைகள், பெட் சைட் கபர்ட்கள் | 2000.00 | | |
| 03 | அச்சுப் பொறிகள் (வர்ண மற்றும் மொனோ அச்சுப்பொறி பீ ஓ எஸ், ஸ்கானர்) மற்றும் மொனோ மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரம், டெக்ஸ்டொப் மற்றும் லெப்டொப் கணனிகள், கணனி துணைப்பாகங்கள், பார்கோர்ட் ரீடர், வெப் கமரா, தொலைநகல் இயந்திரம் | 2000.00 | | |
| 04 | சுடுநீர் ஷவர், குளிர்சாதனப்பெட்டி, கொதிகலன், புல் வெட்டும் இயந்திரம், சலவை இயந்திரம், டிஸ்பென்சர் | 2000.00 | | |

2022-07-04ஆம் திகதி முதல் 2022-07-24ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் ஹாவாஎலிய, நுவரெலியா எனும் முகவரியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத மேற்குறிப்பிடப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கணக்கிடல் பிரிவிற்குச் சமர்ப்பித்து விலைக்கோரல் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2022-07-04ஆம் திகதி முதல் 2022-07-24ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வருகை தந்து விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022-07-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் விலைமனுக்களை ஒப்படைக்கலாம். அன்றைய தினம் மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

- விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனப் பெயரிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘குறித்த விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் விடயம்’’ தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுக்களுடன் இயைபுடைய விலைக்கோரல் பிணை முறியை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சகல விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும். இது தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
- விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களை நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 052-2234482(SC) எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்து அறிந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்.**
2022-07-04ஆம் திகதி நுவரெலியாவில்.

**விவசாயத் திணைக்களம் - பேராதனை**

## கேள்வி கோரல்

**பேராதனை, விவசாயத் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் பெறுகைக் குழுவினால் துப்புறவேற்பாட்டு மற்றும் சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்வதற்காக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன**

இது பற்றிய விபரங்கள் கேள்விப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் போன்றன விவசாயத் திணைக்களத்தின் தலைமையகத்தின் பா/2 கிளையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். விண்ணப்பதாரிகளுக்கு மீளளிக்கப்படாத ரூ. 3000/- கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளருக்கு காசாக செலுத்திய பின்பு பேராதனை பழைய கலஹா வீதியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவில் ப/2 கிளையில் 2022.07.04 முதல் 2022.07.25 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்விப் படிவங்ளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பி.வீ.அ. 13ஆம் திட்டவரிசையின் 8.1இல் காட்டப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்து இருப்பதுடன் அதன் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது குறித்த வளாகத்தை வெளிப்புறமாக பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

சகல கேள்விகளும் பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு, தலைவர், நிர்வாகப் பிரிவு, பெறுகைக் குழு, விவசாயத் திணைக்களம், பழைய கலஹா வீதி, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அமைந்தள்ள தலைமையகத்தன் ப/2 கிளையில் வைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “துப்புறவேற்பாட்டு மற்றும் சுத்திகரிப்பு சேவைக்கான விலைமனுக்கள் 2022/2023” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2022.07.26 மு.ப. 10.30 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக விவசாயத் திணைக்களத்தின் தலைமையகத்தில் பா/2 கிளையில் கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விகளை சமர்ப்பிதோருக்கு அல்லது அவர்களது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 192,000/- கொண்ட கேள்விப் பிணையொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசாக செலுத்துவதாயின் பிணை ரூ. 96,000/- ஆகும். ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்கள் தொ. பே. இல. 081-2388331 -33 (நீடிப்பு 125) மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**நிர்வாகப் பிரிவின் பெறுகைக் குழு.**




**தோட்ட அமைச்சு**

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**

## 2022 ஒகஸ்ட் இலிருந்து 2023 டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கான போட்டிரீதியிலான விலைமனுக்கோரலில் பாதுகாப்பு சேவைகளுக்கான விலைமனு அழைப்பு

2022 ஒகஸ்ட் இலிருந்து 2023 டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கு (1) தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் செயிண்ட் கூம்ஸ் பெருந்தோட்டம், தலவாக்கலை (2) இரத்தினபுரி (3) வலஹந்துவ (4) தெனியாய மற்றும் (5) ஹந்தான ஆகிய அமைவிடங்களுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றுள்ள புகழ்வாய்ந்த பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து தேயிலை ஆராய்ச்சி நிலைய திணைக்கள பெறுகைக் குழுவினால் (உயர் மட்டம்) தனித்தனியாக முத்திரை வைக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

தனியான பாதுகாப்பு நிறுவனங்களினால் ‘தேயிலை ஆராய்ச்சி நிலைய’ என்ற கணக்கு பெயரின் கீழ் தலவாக்கலை இலங்கை வங்கியின் 03630616 என்ற நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு ஒவ்வொரு அமைவிடத்திற்கும் மீளளிக்கப்படாத ரொக்கப் பண கட்டணமான 2,500 ரூபாவை செலுத்திய பின்னர், வங்கி வைப்புத்துண்டுடன் ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதன் மூலம் http://www.tri.lk/tenders/ என்ற தேயிலை ஆராய்ச்சி நிலைய இணையதளத்திலிருந்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பதிவிறக்கமும் செய்யலாம்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Bids for Security Service: August 2022 to December 2023” வரையும் தலவாக்கலை/ இரத்தினபுரி/வலஹன்துவ/ தெனியாய/ ஹந்தான என எழுதப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு(உயர் மட்டம்), இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் தலவாக்கலை என எழுதப்படல் வேண்டும். தனியான விலைமனு ஆவணங்கள் கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, தலகொட்டுவ கார்டன்ஸ், நாலாம் ஒழுங்கை, 71/4 ஆம் இலக்கத்திலுள்ள தேஆநி விருந்தினர் விடுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் மற்றும் தேஆநி இனால் அறிவிக்கப்படும் ஏனைய அலுவலகங்களில் உரித்தான அமைவிடங்களில் 2022 ஜூலை 18 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான மற்றும் பூர்த்தி செய்யப்படாத சமர்ப்பிப்புக்கள் நிராகரிக்கப்படும்.

ஒன்லைன் தளத்தினூடாக 2022 ஜூலை 11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு தலவாக்கலை, தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். இத்தொடர்பை 2022.07.08 ஆம் திகதியிலிருந்து 052-2258201 என்ற இலக்கத்தின் வழியாக தே.ஆ.நி. தகவல் தொழில்நுட்பவியல் அலகிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2022 ஜூலை 19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு ஒன்லைன் தளத்தினூடாக விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

ஆர்வ வெளிப்பாட்டை முழுமையாக அல்லது பகுதியாக/ பகுதிகளில் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான அதிகாரத்தை தேயிலை ஆராய்ச்சி நிலைய திணைக்கள பெறுகைக் குழுவானது (உயர் மட்டம்) கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**தலவாக்கலை.**

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூலை 4
திங்கட்கிழமை

## சிறுநீரக நோயினால் பாதிப்புற்றவர் உதவி கோரல்

வட்டக்கச்சி, சந்தையடி, விநாயகர் வீதியில் வசிக்கும் புலேந்திரராசா சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவருக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் மூவரும் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

குடும்ப செலவுகள், பிள்ளைகளின் படிப்பு செலவுகள், போக்குவரத்து செலவுகள், வைத்தியசாலை செலவுகள் என பல்வேறு செலவுகள் ஏற்பட்டுள்ளன.

இவற்றை தன்னால் தனியாக சமாளிக்க முடியாது இருப்பதாகவும் நாளாந்தம் இருவேளை வைத்தியசாலைக்கு சென்று வருவதால் கூலி வேலைக்கும் தன்னால் செல்ல முடியாது இருப்பதாகவும் இவரது மனைவியான திருமதி புலேந்திரராசா குகனேஸ்வரி தெரிவித்துள்ளார்.

இவர் தனது செலவுகளை சமாளிக்க பரோபகாரிகளின் உதவியை கோரியுள்ளார். நிதியுதவிகளை கிளிநொச்சியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் 048 200160061349 என்ற கணக்கிலத்தில் வைப்பிடுமாறு இவர் கேட்டுள்ளார்.

## மன்னார் மருதமடு அன்னையின் பெருவிழா



மன்னார் மறைமாவட்டத்தின் யாத்திரிகள் ஸ்தலமான மருதமடு அன்னையின் ஆடி மாத பெருவிழா சனிக்கிழமை (02.07.2022) நடைபெற்றபோது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு பேனாட் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இணைந்து பெருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும் பக்தர்களின் ஒரு பகுதினரையும் மருதமடு அன்னையின் திருச் சுரூப பவனியையும் படங்களில் காணலாம். (தலைமன்னார் விஷேட நிருபர் )

# யாழ்.- கிளி புகையிரத சேவை அடுத்த வாரம் ஆரம்பமாகிறது

### அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு பலன்

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையிலான விசேட புகையிரத சேவையொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் முயற்சியால் அடுத்த வாரம் ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு அரச அலுவலகங்களில் பணியாற்றுவதற்காகச் சென்றுவரும் நூற்றுக்கணக்கான அலுவலர்களின் நன்மை கருதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்ட இந்தப் புகையிரதசேவையைத் தொடங்குவது தொடர்பாக புகையிரதசேவை அதிகாரிகள் நேரில் வந்து ஆராய்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்கள் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் வளாக விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் ஊடாக, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இரண்டு வாரங்களில் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான இணக்கத்தைப் பெற்றிருந்தார்.



இதனையடுத்து, இந்தப் புகையிரதசேவையை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக புகையிரதத் திணைக்களத்திலிருந்து வருகை தந்திருந்த பிரதி பொது முகாமையாளர் ஏ.டி.ஜி.செனவிரத்ன, நேற்று காலை யாழ்ப்பாண புகையிரத நிலைய அதிபர் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினார்.

அதன்பின்னர், அமைச்சரின் இணைப்பாளர் றுஸாங்கனுடன் இணைந்து புகையிரதத்தில் கிளிநொச்சிக்குப் பயணமான பிரதிப் பொது முகாமையாளர், அங்கு வட பிராந்திய புகையிரத சேவைகள் பணிப்பாளர் விசுந்துர மற்றும் கிளிநொச்சி மாவட்ட புகையிரத நிலைய அதிபர் சிகாமணி ஆகியோருடனும் மேலும் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

தொடர்ந்து, அவர்களுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற அவர், அங்கு மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்து புகையிரத சேவைக்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

இதன்பின்னர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதுது வேண்டுகோளுக்கு அமைவாக அடுத்த வாரமே யாழ். கிளிநொச்சி புகையிரத சேவையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்த அவர், விரைவில் புகையிரதசேவை ஆரம்பிக்கும் திகதியை அறியத்தருவதாகவும் தெரிவித்துவிட்டுக் கொழும்பு திரும்பினார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலிருந்து கிளிநொச்சி அறிவியல் நகர் வரையில் நடாத்தப்படவுள்ள இந்தச் சேவையின் மூலம் அரச அலுவலர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் என சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டாவளை கோட்ட முன்பருவ பள்ளி பிள்ளைகளுக்கு உணவு வழங்க திட்டம்



நாட்டில் தற்போது மோசமாக அதிகரித்து செல்லும் உணவுப் பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக இளைய பருவத்தினர் போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்படும் நிலையைக் கருத்தில் கொண்டு IMHOUSA அமைப்பு மகிழ்ச்சிகர உணவு வழங்கும் திட்டத்தை கிளிநொச்சி, மட்டக்களப்பு மேற்கு மற்றும் ஹட்டன் பகுதிகளில் செயற்படுத்தி வருகின்றது. அவ்வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை கல்வி கோட்டத்தில் இயங்கும் 18 முன்பள்ளிகளைச் சேர்ந்த 466 பிள்ளைகளுக்கான மேற்படி திட்டத்தை IMHOUSA அமைப்பு World Vision உடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது. இதனை அடியொற்றி கண்டாவளையின் தருமபுரம் புதிய உதயம் முன்பள்ளியில் 52 பிள்ளைகளுக்கான உணவு வழங்கும் இத்திட்டத்தை IMHOUSA அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் பி.விஜயநாதன் உடன் இணைந்து பார்வையிட்டார். அத்துடன் இவ்விஜயத்தின் போது கிளிநொச்சி தெற்கு வலயத்தை சேர்ந்த ஐந்து பாடசாலைகளில் 700 மாணவர்களுக்கான காலையில் உணவு வழங்கும் திட்டம் தொடர்பில் அப்பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடினார். இத்திட்டம் வருகின்ற கிழமை தொடக்கம் இப்பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## அல்வாயில் வள்வெட்டு இருவர் படுகாயம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட அல்வாய்ப் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் படுகாயம் அடைந்த இருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஆபத்தான நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை(02) மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அல்வாய் கிழக்கைச் சேந்தவர்களான பரமலிங்கம் சிவனேஸ்வரன் (வயது 29) மற்றும் மாணிக்கராஜா கசீவன் (வயது 46) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர். இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தமிழர் தேசிய பேரவையால் வந்தாறுமூலையில் உதவிகள்



**கரவெட்டி தினகரன் நிருபர்**

தமிழர் தேசிய பேரவையால் வந்தாறு மூலையில் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்குள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறு மூலைப் பிரதேசத்தில்லுள்ள தெரிவு செய்யப்பட்ட 25 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தமிழர் தேசியப் பேரவையினரால் தலா பத்தாயிரம் ரூபா வீதம் 2,50,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஜெர்மனியில் வசிக்கும் சகபிலன் என்பவரது நிதி பங்களிப்பிலேயே இவ் உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழர் தேசியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களில் ஒருவரான தரணிகன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழர் தேசியப் பேரவையின் உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மீசாலை சந்தியில் பேருந்து மோதி தாத்தாவும் பேத்தியும் படுகாயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் 03/07 ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து மோட்டார் சைக்கிளில் சென்ற தாத்தா மற்றும் அவரது பேர்த்தி மீது மோதியதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த 70வயதான முதியவர் மற்றும் அவருடைய 18வயதான பேத்தி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் .

## மன்னாரில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் மரணம்

**தலைமன்னார் விசேட நிருபர்**

ரயில்வே கடவையில் பாதுகாப்புக்கான தடை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படாமையினால் ஒரு குடும்பஸ்தர் அநியாயமாக ரயிலில் மோதி மரணிக்க வேண்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ் சம்பவம் மன்னாரில் இசைமாலை தாழ்வு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (03.07.2022) காலை 7. 5 மணி அளவில் இடம் பெற்றுள்ளது.

இது சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

ஞாயிற்றுக்கிழமை (03.07.2022) காலை தலைமன்னாரில் இருந்து அனுராதபுரம் நோக்கி புறப்பட்ட ரயில் இசைமாலை தாழ்வு பகுதியில் சென்று கொண்டிருந்த பொழுது ரயில்வே கடவையை மோட்டார் சைக்கிளில் சென்ற ஒரு குடும்பஸ்தர தாண்டி செல்லும் பொழுது அவர் ரயிலில் மோதுண்டு இழுத்து செல்லப்பட்ட நிலையில் மரணித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் ரயில்வே கடவை போடப்பட்டிருந்த போதும் கடவையில் அந்நேரத்தில் எவரும் கடமையில் இல்லாமையினாலேயே இவ் சம்பவம் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுளது.

ரயிலில் மோதிய நபர் சுமார் 100 மீட்டர் தூரம் இழுத்துச் செல்லப் பட்டு மரணித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் சடலத்தை உடன் ரயிலில் ஏற்றிக்கொண்டு மடு புகையிரத நிலைய அதிபரிடம் ஒப்படைத்து செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

விபத்தில் இறந்தவர் கணபதி கனகராஜ் (வயது 27) என இறந்தவரின் மனைவியும் சகோதரரும் அடையாளம் காட்டி இருந்தனர்.

இதைத்தொடர்ந்து மன்னார் மரண விசாரனை அதிகாரி குணகுமார் முன்னிலையில் இறந்தவரின் மனைவியும் சகோதரரும் கொடுத்த வாக்குமூலத்தின் பிரகாரம் தெரிய வருவதாவது,

இறந்தவர் தனது கணவர் எனவும் தாங்கள் மாளிகைப்பிட்டியைச் சார்ந்தவர்கள் எனவும் தனது கணவர் இசைமாலை தாழ்வு பகுதியில் தொழில் புரிந்து வருவதாகவும் ஞாயிற்றுக்கிழமை காலை தொழிலுக்காக மாளிகாவத்தையிலிருந்து இசைமாலை தாழ்வு பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற பொழுதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## தண்ணீரூற்று புளியடி நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை தண்ணீரூற்று புளியடி நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

நேற்று காலை ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெற்றதோடு தினமும் ஆலயத்திலே விசேட அபிஷேகம் பூசை என்பன இடம் பெறுகின்றன.

நேற்று மாலை ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு பொங்கல் உற்சவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



நெருக்கடி காலங்களில் பணிபுரியும்

## அரச ஊழியர்கள், ஊடகவியலாளர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்க வேண்டும்

**நிந்தவூர் குறூப் நிருபர்**

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அரச கடமைகளை மேற்கொள்ளும் அரச ஊழியர்களுக்கும், நம்பகமான செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு போய்ச்சேர்க்கும் ஊடகவியலாளர்களுக்கும் அரசாங்கம் சலுகை அடிப்படையில் துவிச்சக்கர வண்டிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென, கோரிக்கை விடுப்பதாக, நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித்தவிசாளர் வை.எல். சுலைமாலெப்பை தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் தலைமையில், அண்மையில் நடைபெற்ற சபையின் 52வது மாதாந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் :

தற்போதைய பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இக்காலப்பகுதியிலும், சிலர் கடமைகளுக்குச் செல்கின்றனர். இவ்வாறு பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களினதும், ஊடகவியலாளர்களினதும் பணிகள் போற்றத்தக்கவை. இவர்கள் நாட்டில் ஏற்படும் சகல கஷ்ட நிலைமைகளிலும், நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர். கடந்த கொரோனா காலத்திலும், மிகவும் அர்ப்பணிப்பாக செயற்பட்ட அரச உத்தியோகத்தர்களும், ஊடகவியலாளர்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலத்திலும் மிகவும் அர்ப்பணிப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

மேலும், எரிபொருள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அரச ஊழியர்களும், ஊடகவியலாளர்களும் வரிசையில் நின்றே இதனைப் பெற்றுக்கொள்ள நேரிடுகிறது. இதனால், அவர்களின் பொன்னான நேரங்கள் வீணடிக்கப்படுவதுடன், அவசர தேவைகளின் போது தங்களது கடமைகளை நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலைமைக்கும் தள்ளப்படுகின்றனர்.

தற்போதைய காலகட்டத்தில் துவிச்சக்கர வண்டிகளை அதிகமானோர் பாவித்து வரும் சந்தர்ப்பத்தில், சில அரச உத்தியோகத்தர்களும், ஊடகவியலாளர்களும் இந்த துவிச்சக்கர வண்டி கூட இல்லாத நிலையில், பேருந்துகளில் பயணம் செய்து, தங்களுடைய கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். உண்மையில் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அரசாங்கம் துவிச்சக்கர வண்டகைளை வழங்க வேண்டியது அவசியமாகும். இந் நாட்டில் ஏற்படும் சகல இக்கட்டான நிலைமைகளின்போதும், அரச உத்தியோகத்தர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் அரசினால் நிவாரணங்கள் வழங்கப்படுவது குறைவாகும்.

எனவே, இந்த விடயத்தில் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் ஊடக அமைச்சர் ஆகியோர் உடன் கவனம் செலுத்தி, இவ்விரு துறையினருக்கும் சலுகை அடிப்படையில் துவிச்சக்கர வண்டிகளை வழங்குமாறு எழுத்து மூலம் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



வரலாற்றுப்பிரசித்தி பெற்ற சம்மாந்துறை கோரக்கோயில் அகோர மாரியம்மன் ஆலய தீமிதிப்பு சடங்கின் ஆரம்ப நிகழ்வான காரைதீவு கடலில் கடல்நீர் எடுத்தலுடன் ஆலய திருக்கதவு திறத்தல் நிகழ்வு நேற்று (03) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டோரைப் படத்தில் காணலாம். (படங்கள். காரைதீவு குறூப் நிருபர்)

## வெளிநாடு செல்ல முற்பட்டவர்கள் கைது

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை ஜமாலியா கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முற்பட்ட 54 பேரை கடற்படையினர் அண்மையில் (02)கைது செய்தனர். கடற்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக இவர்களை கைது செயதைதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் மூன்று சிறுவர்கள், ஆறு பெண்கள் அடங்குவதாகவும் கடற்படையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். இவர்களை தற்போது திருகோணமலை கடற்படை முகாமில் தடுத்து வைத்து வாக்குமூலம் பெறப்படுகிறது. திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் இவர்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தெற்காசியப் பிரதிநிதியுடன் சாணக்கியன் எம்பி பேச்சு



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து நோர்வே வெளிவிவகார அமைச்சின் தெற்காசியாவிற்கான பிரதிப் பணிப்பாளரைச் சந்தித்து,பாராளுமன்ற உறுப்பினர் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.இரா.சாணக்கியன் எம்பி,நோர்வேக்கு விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்த சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள், அதனால் ஏற்படுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பிலும், இவற்றுக்கான தீர்வுகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

## வீதியைவிட்டு விலகிய லொறி ஆற்றில் விழுந்துவிபத்து



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு வவுணதீவு வலையிறவுப் பாலத்தருகில், கனரக லொறி ஒன்று வீதியை விட்டு விலகி ஆற்றில் வீழ்ந்தது.

இச்சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இவ்வீதியால் இரண்டு லொறிகள் சென்ற சமயம், ஒரு லொறியை மற்ற லொறி முந்திச் செல்ல முற்பட்டது.

இதன்போதே, இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரியவருகின்றது.

வீதியை விட்டு விலகி ஆற்றுக்கு குடைசாய்ந்த லொறி பெரும் சேதத்துக்குள்ளானது. இதேவேளை வாகனத்தில் இருந்த சாரதியும் நடத்துநரும் தெய்வாதினமாக உயிர் தப்பினர்.

சம்பவ இடத்திற்கு வவுணதீவு பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அக்கரைப்பற்றில்

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று (04) திங்கட்கிழமை ஒரு நாள் சுகயீன வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க உபதலைவரும், அக்கரைப்பற்று சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்க தலைவருமான ஐ.எச். அப்துல் வஹாப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பூராகவும் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தங்களது அத்தியாவசிய பணிகளை திறம்பட செய்வதற்கு எரிபொருள் இல்லாத காரணத்தால் அதனை பெற்றுத்தரும் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமும் விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை எந்தவித பதிலும் கிடைக்காத நிலையிலே நாடு பூராகவும் இன்று (04) அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அம்பாறை மாவட்டத்திலும் இப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஐ.எச்.அப்துல் வஹாப் தெரிவித்துள்ளார்.

ஆகவே இன்று இம்மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்றில் சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி அலுவலகங்களுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணிக்கு செல்வதில்லை என்று முடிவெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாராய விற்பனையில் ஈடுபட்டவருக்கு அபராதம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

திருக்கோவில் பொலிஸ் பிரதேசத்திற்குற்பட்ட தாண்டியடி பகுதியில் அனுமதிபத்திரமின்றி சட்ட விரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

180 மில்லி லீட்டர் சாராயத்தையும், 625 மில்லி லீட்டர் வியர் ஆகியவற்றையும் அனுமதி பத்திரமின்றி விற்பனை செய்தமைக்காக, திருக்கோவில் பொலிஸார் நபர் ஒருவரை கைது செய்தனர்.

அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் கடந்த செவ்வாய்கிழமை இவரை,ஆஜர் செய்தபோது மேற்படி குற்றங்களுக்காக 10000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் பொதுமக்களுக்கு முன்னுரிமை வழங்கி ஐ.ஓ.சி ஊடாக எரிபொருள் விநியோகம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

அத்தியாவசிய சேவைக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்பட்டுவரும் இன்றைய நிலையில்,

பொதுமக்களுக்கு முன்னுரிமை வழங்கி,மட்டக்களப்பு நகரில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. ஐ,ஓ,சி நிறுவனம் இதற்கான நடவடிக்கையை எடுத்திருந்தது. இவ்வாறு, சுமார் 6600 லீட்டர் எரிபொருள் பொதுமக்களுக்கு நேற்று (03) விநியோகிக்கப்பட்டது.ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 92 ஒக்டேன் பெற்றோலும், 95 ஒக்டேன் பெற்றோலும் விநியோகிக்கப்பட்டன.



அதேவேளை இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுருமாருக்கும், எரிபொருளின்றி தமது சேவையை வழங்க முடியாதிருந்த மட்டக்களப்பு மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அடங்கலாக 100 பேருக்கும், விவசாயிகள் 50 பேருக்கும், மிக நீண்டகாலமாக எரிபொருள் தட்டுப்பாட்டினால் தமது கடமையினை செய்ய முடியாமல் கஷ்டத்தை அனுபவித்து வந்த மட்டக்களப்பு மாவட்ட திடீர் மரண விசாரனை அதிகாரிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்கப்பட்டது.இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன், சீரான முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு நகரிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக கடந்த நான்கு நாட்களாக மக்கள் எரிபொருளைப் பெறக்காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பின்தங்கிய மக்களுக்கு உதவும் ஒரு நாளைக்கு ஓர் உணவுப் பொதி

**அட்டடாளைச்சேனை குறூப் நிருபர்**

நாட்டின் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக தமது அன்றாட உணவைக்கூட சமாளிக்க முடியாது அல்லலுறும் வறுமைக் கோட்டில் வாழும் ஏழைளின் நலனைக்கருதிற் கொண்டு "ஒரு நாளைக்கு ஓர் உணவுப் பொதியை" பொது மக்களிடமிருந்து பெற்று அவைகளை ஏழைகளுக்கு வழங்கும் திட்டமொன்றை அக்கரைப்பற்றிலுள்ள சமூக ஆவலர்கள் நடைமுறைப்படுதி வருகின்றனர்.

இத்திட்டத்திற்கு அக்கரைபற்று மக்கள் முழு மனதோடு தமது பூரண ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். அநேகமானோர் தமது பகல் உணவை இங்கு வந்து பெற்றுக் கொள்கின்றனர்.



இது தொடர்பாக கருத்துத்தெரிவித்த சமூக ஆவலர் சிராஜ் மசூர் ,ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பணி மிகவும் சிறப்பாக செயற்படுத்தப்பட்டுவருவதாகவும் ஏழாயிரம் பார்சல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.சமூக ஆவலர் எம்.ஐ.அபூ சஹீத் ஒரு நபருக்கு உணவுப் பார்சல் வழங்குவதை படத்தில் காணலாம்.



நாட்டில் தற்பொழுது எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் மாட்டுவண்டில்களில் பயணிக்க ஆரம்பித்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் பிரசித்திபெற்ற சுற்றுலாப்பிரதேசமான பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில், மாட்டு வண்டியில் பயணிக்கும் வெளிநாட்டு சுற்றுலாபயணிகளை படத்தில் காணலாம்.

(எம்.என்.எம்.அப்ராஸ்)

## வெளிநாட்டு யுவதிகளை வல்லுறவுபுரிந்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை, நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலூர் பகுதியில் வெளிநாட்டு யுவதிகள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின்பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிலாவெளி வேலூர் பகுதியிலுள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 28 வயது மற்றும் 31 வயதுடைய யுவதிகளையே,இந்நபர் பாலியல் வல்லுறவுக்குஉட்படுத்தியுள்ளார். இந்த யுவதிகள்,கடற்கரையோரமாக சென்று கொண்டிருந்தபோது உள்வீதியூடாக வந்த இளைஞர், இவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,பாதிக்கப்பட்ட பிரான்ஸ் யுவதிகள், சட்ட வைத்திய நிபுணர் அறிக்கையை பெறுவதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கதிர்காம பாதயாத்திரை பாதை இம்மாதம் 28இல்திறப்பு

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுவழிப்பாதை இம்மாதம் (22) திறக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் (05) மூடப்படும் என அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம் எ. டக்ளஸ் தெரிவித்தார்

இதேநேரம் கதிர்காமம் மற்றும் உகந்தை முருகன் ஆலயங்களின் கொடியேற்றம் இம்மாதம் (29) இடம்பெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. கடந்த இரு வருடங்களாக கொரோனா தாக்கம் காரணமாக தடைப்பட்டிருந்த பாதயாத்திரை இவ் வருடம் மீண்டும் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் யாத்திரை தொடர்பாக உகந்தை முருகன் ஆலயத்தில், அரச திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட உயர்மட்ட கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கதிர்காம பாதயாத்திரைக்கான குமண ஊடான காட்டுவழிப்பாதை இம்மாதம் 22ஆம் திகதி காலை உகந்தை முருகன் ஆலயத்தில் இடம் பெறும் பூஜையை தொடர்ந்து 7 மணியளவில் திறக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்படும். இக் காலத்தில் தினமும் காலை 6 மணிக்கு திறக்கப்படும் பாதை, பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும் எனவும் குறிப் பிட்டனர்.

அதுபோல் பாதயாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு சுகாதார சேவைகள் குடிநீர் வசதி போன்றவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றனர்.

மேலும் பாதயாத்திரிகர்கள் சூழலை மாசுபடுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனைகளை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

# நகர்வலம்



## நடிகர் ஜாக்சன் அண்டனி உள்ளிட்ட

# மூவர் பயணித்த கார் காட்டு யானையுடன் மோதி விபத்து

### தலாவ பகுதியில் சம்பவம்



**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள்**

பிரபல சிங்கள நடிகர் ஜாக்சன் அண்டனி உள்ளிட்ட மூவர் பயணித்த கார் அநுராதபுரம் தலாவ வீதியில் மொரகொட பகுதியில் நேற்று முன்தினம் இரவு (02) காட்டு யானை ஒன்றுடன் மோதியதில் அண்டனி உள்ளிட்ட குழுவினர் காயத்திற்குள்ளாகி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தலாவ பொலிசார் தெரிவித்தனர்.

விபத்துடன் காட்டு யானை வண்டியின் மேல் விழுந்ததுடன் வாகனமும் பலத்த சேதமடைந்துள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜாக்சன் அண்டனி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் சமன் அண்டனி அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் இரேஷ் இல 11 வாட்டிலும் சிகிச்சை பெற்று வருவதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் தொலைக்காட்சி படப்பிடிப்பொன்றினை எடுப்பதற்காக சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ஜாக்சன் அண்டனி உடன் பயணித்த சமன் அண்டனி மற்றும் இரேஷ் ஆகிய மூவருமே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

மொரகொட பிரதேச மக்களும் தலாவ பொலிசாரும் இணைந்து காயமடைந்த மூவரையும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

## கட்டார் அறக்கட்டளை மீதான தடை நீக்கம்; உலமா கட்சி பாராட்டு



கட்டார் அறக்கட்டளை மீதான இலங்கையின் தடையை நீக்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் முயற்சியை ஐக்கிய காங்கிரஸ் கட்சி, (உலமா கட்சி) பெரிதும் வரவேற்றுள்ளதுடன் இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் மிகச்சிறந்த நடவடிக்கையாகும் எனவும் தெரிவித்துள்ளது.

இதுபற்றி இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மேலும் தெரிவித்திருப்பதாவது,

2019ம் ஆண்டு ஸஹ்ரான் என்ற பயங்கரவாதியின் அப்பாவிகள் மீதான குண்டு வெடிப்பின் காரணமாக அப்போதிருந்த அரசாங்கம் அப்பாவி முஸ்லிம்கள் மீதும், பயங்கரவாதத்துக்கு கொஞ்சமும் துணைபோகாத முஸ்லிம் அமைப்புக்கள் மீதும் சட்டத்தை பாவித்தது.

சுமார் மூவாயிரத்துக்கு அதிகமான முஸ்லிம்கள் எழுந்தமானமாக கைது செய்யப்பட்டனர். முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் பதிவு பெற்றிருந்த 600க்கு மேற்பட்ட முஸ்லிம் நலன்புரி அமைப்புக்கள் சரியான விசாரணை இன்றி தடை செய்யப்பட்டன.

நல்லாட்சிக்கு பின் வந்த ஆட்சியில் இது விடயங்கள் மாறி இனவாதம் இல்லாத அரசாங்கம் அமையும் என்று எதிர் பார்த்தோம்.

ஆனால் அந்த அரசும் நல்லாட்சி போன்றே முஸ்லிம்கள் விடயத்தில் தொடர்ச்சியாக பிழை விட்டு இன்று இலங்கை என்பது முஸ்லிம் நாடுகளின் செல்லப்பிள்ளை என்பதிலிருந்து மாறி இலங்கை மிக மோசமான இனவாத நாடு என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளது.

ஆகவே கட்டார் அறக்கட்டளை மீதான தடையை நீக்க எடுக்கும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை வெற்றியாக அமைந்து நமது நாடு முன்னர் போன்று அரபு நாடுகளின் உற்ற நட்பு நாடாக மாற ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) பிரார்த்திக்கிறது.





குவைத் நாட்டின் நன்கொடையின் கீழ் வெலிகம அஸ்ஸபா மகா வித்தியாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடம் அண்மையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கைக்கான குவைத் தூதுவர் ஹலாப் எம்.புதைர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைப்பதையும் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். ஹிப்ளார் உட்பட அல்ஹிமா நிறுவனத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். நூறுள்ளாஹ் (நளீமி), தென்மாகாண கல்வி பிரதிப் கல்விப் பணிப்பாளர் எம்.டீ.எம். ஆகில் உட்பட முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

**படங்கள்: அஷ்ரப் ஏ சமத், வெலிகம தினகரன் நிருபர்**

# சீனன்கோட்டையிலிருந்து 65 பேர் புனித ஹஜ் கடமைக்காக மக்கா பயணம்

### நாட்டுக்காகவும் பிரார்த்திக்குமாறு பள்ளிச் சங்கம் வேண்டுகோள்





பேருவளை, சீனன்கோட்டையிலிருந்து இம்முறை சுமார் 65 பேர் (ஆண்கள், பெண்கள்) புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா நகர் நோக்கி பயணமானார்கள்.

இவர்களை வழியனுப்பும் வைபவ ரீதியான நிகழ்வுகள் 02, 03ஆம் திகதிகளில் சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலில் பள்ளிச்சங்க இணைச்செயலாளர் ஷிஹாப் ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது. துஆப் பிரார்த்தனை, விசேட உரைகளும் இதன்போது இடம்பெற்றன.

இங்கு கருத்து தெரிவித்த பள்ளிச் சங்க இணைச்செயலாளர் ஷிஹாப் ஹாஜியார், எமது ஊரிலிருந்து ஆண்களும் பெண்களும் புனித ஹஜ் கடமைக்காக செல்வதையிட்டு ஊர் மக்கள் என்ற வகையில் நாம் சந்தோசமடைகிறோம். வல்ல நாயன் உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை வழங்கி மேலான ஹஜ் கடமையை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென இறைவனிடம் முதல்கண் பிரார்த்திக்கிறோம். அத்துடன் நீங்களும் விசேடமாக எமது தாய் நாட்டுக்காகவும் , ஊர் நிலைமைகள் முழுமையாக சீராகவும் புனித மக்கமா நகர் பூமியில் பிரார்த்தனை புரியுமாறு உங்களிடம் பள்ளிச் சங்கத்தின் சார்பாக விசேடமாக கேட்டுக்கொள்கிறேன். மேலும் கடமைகள் முடிந்து தேக ஆரோக்கியத்துடன் நாடு திரும்ப பிரார்த்திக்கிறேன் என்றார்.

ஹாஜிகளை வழியனுப்புவதற்காக ஊர் மக்கள் பெருந்திரளானோர் பள்ளிவாசல் வளாகத்தில் குழுமியிருந்து முஸாபஹா செய்து வழியனுப்பி வைத்தமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் பள்ளிச்சங்க உறுப்பினர்களான அஷ்ஷெய்க் ரிழ்வான் (நளீமி), ஹில்மி மௌஸூன், அரூஸ் அனஸ் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர். சீனன்கோட்டையிலிருந்து இம்முறை ஏசியன் ஹஜ் குழு, ஹாஜரா ஹஜ் குழு ஆகிய இரு ஹஜ் முகவர்களினூடாக சுமார் 65 பேர் ஹஜ் கடமையை நிறைவேற்ற சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


### இலங்கை துறைமுக அதிகார சபை

## ஏலவிற்பனை அறிவித்தல்

### அழிந்துபோகக்கூடிய சரக்குகளின் விற்பனை

**ஏலவிற்பனைத் திகதி: 2022 – 07 – 06**

**எனது இல. LD/S/CICT/2022/05/PC-04**

கொழும்பு துறைமுகத்தின் CICT முற்றவெளியில் வைக்கப்பட்டுள்ள அழிந்துபோகக்கூடிய சிறிய பொருட்களுடன் கூடிய கொள்கலன் சரக்கை (Fresh Apple) கொள்வனவு செய்து அப்புறப்படுத்துவதற்காக 2022.07.06ஆம் திகதி 1300 மணித்தியாலத்தில் BQ நலன்புரிக் கட்டிடத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்தக் கொள்கலன்களுக்காக தாவர தனிமைப்படுத்தல் நிறுவனத்தின் அனுமதி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதியை சித்திகரமான கேள்விதாரர் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அந்தச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான கேள்விதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்குமாறு அறியத்தரப்படுகின்றது. இயைபுடைய சான்றிதழ்களை ஐந்து (05) நாட்களுக்குள் பெற்று சமர்ப்பிக்கத் தவறினால் அவரது பிணை வைப்புத் தொகை துறைமுகத்திற்கு உரித்தாக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

ஏல ஆவணங்கள் மற்றும் நுழைவு அனுமதி அட்டைகளை (Gate Pass) மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (+VAT) மற்றும் மீளளிக்கப்படும் 200,000.00 ரூபா கட்டணம் செலுத்தி கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின், விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2022.07.05ஆம் திகதி 08.30 மணித்தியாலம் முதல் 10.00 மணித்தியாலம் வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். அன்றைய தினமே 12.00 மணித்தியாலம் முதல் 13.00 மணித்தியாலம் வரையில் பொருட்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து www.slpa.lk இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்),**
2022-07-04
**சேவை வழங்கல் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகார சபை.**
**கொழும்பு -01.**


# புத்தளத்தில் பிரதான வீதியின் வடிகான்கள் துப்புரவாக்கும் பணி



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக்கின் பணிப்பின்பேரில் புத்தளம் நகர மத்திய பிரதான வீதியின் வடிகான்கள் துப்புரவாக்கும் பணிகள் (30) நகரசபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொன்கிரீட் மூடிகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டதுடன் சில வர்த்தக நிலையங்களுக்கு முன்னாலுள்ள வடிகான் பகுதிகள் முழுமையாக தடைப்பட்டும் காணப்பட்டன.

வர்த்தக நிலையங்களில் நிர்மாணிப்பு வேலைகள் செய்யப்படும்போது கல், மண் போன்ற நிர்மாணப் பொருட்கள் வடிகான்களில் தேங்கி விடுவதால் அவற்றை அகற்றாமலேயே சிலர் மேலே கொன்கிரீட் மூடியைப் போட்டு மூடி விடுவதனாலும் மேலும் அகற்றப்படும் குப்பை கழிவுகளையும் பலர் வடிகான்களுக்குள்ளேயே போடுவதாலும் தடைகள் ஏற்படுகின்றன.

எனவே வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் மட்டுமன்றி ஏனைய பகுதிகளிலும் கட்டட நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவோர் நகரசபையின் மேற்பார்வையில் வடிகான்களை முறையாக முழுமையாக துப்புரவாக்கிய பின்னர் கொன்கிரீட் மூடிகளை உரிய முறையில் இடுவதோடு வடிகான்களுக்குள் குப்பை கழிவுகளை போடுவதையும் தவிர்க்குமாறு நகரசபை வேண்டுகோள் விடுக்கிறது.

நகரபிதா ரபீக் குறித்த வேலைத் திட்டத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதோடு இவ்வேலைத்திட்டத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனது ஊழியர்களையும் புதிய கொன்கிரீட் மூடிகளையும் தந்து உதவி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



உபுல் தேவப்பிரியவால் தொகுக்கப்பட்ட"முகநூலின் விசைப்பலகையில்" புத்தக வெளியீட்டு விழாவில் இசை வழங்கிய 10 வயது சிறுமிகள் அடங்கிய இளம் இசைக் குழுவிற்கு மதிப்புமிக்க பை, உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் அடங்கிய பரிசுப் பொதிகளை அட்லஸ் நிறுவனம் வழங்கியது. அட்லஸ் நிறுவனத்தின் அதிகாரி சுபுன் அஞ்சனா பரிசுப் பொதியொன்றை வழங்குவதையும் விழா ஒருங்கிணைப்பாளர் அருண தம்மிக்க மற்றும் உபுல் தேவப்பிரிய ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து காப்பதற்கு

# பிள்ளைகளின் திறன்களை சிறு வயதிலிருந்தே வளர்க்க வேண்டும்

போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் கடத்தலுக்கு எதிரான உலக தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி அபாயகர ஔடத கட்டுப்பாட்டு சபை பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொஹொலன கெதரவுனடான நேர்காணல்.

**கேள்வி: இலங்கையில் போதைப்பொருள் பிரச்சினையின் தன்மை எத்தகையது?**

போதைப்பொருட்களில் சட்டப்பூர்வ மற்றும் சட்டவிரோதம் என இரண்டு பிரிவுகள் உள்ளன. சட்டப்பூர்வமாக்கப்பட்ட பொருட்களாக புகையிலை சார்ந்த பொருட்கள் மற்றும் சட்டப்பூர்வ மதுபான பொருட்கள் ஆகியவை அடங்கும். ஹெரோயின், கஞ்சா, ஆம்பிடமைன் போன்றவற்றை சட்டத்தால் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களாக குறிப்பிடலாம். ஹெரோயின் பாவனை 100,000 முதல் 120,000 வரை உள்ளதோடு கஞ்சா பாவனை சுமார் 400,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து வருகின்றது.

**கேள்வி: இலங்கையில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விநியோகம் இடம்பெறுவது பற்றி?**

போதைப்பொருள் பாவனைக்கு இளைஞர்களும் குழந்தைகளும் இலக்காகியுள்ளனர். சுற்றுச்சூழல் காரணிகள், தனிநபரின் உயிரியல் காரணிகள் மற்றும் போதைப் பொருளின் இரசாயன பண்புகள் இதற்குக் காரணமாகிறது. பாதுகாப்பு காரணிகளை அதிகரிப்பது மற்றும் தீங்கு விளைவிக்கும் காரணிகளைக் குறைப்பது மற்றும் சிறுவர்களை போதைப்பொருள் பாவித்துபார்க்கும் முயற்சிகளில் இருந்து காப்பாற்றுவது போன்ற விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.



**கேள்வி: கஞ்சாவில் மருத்துவக் குணம் இருப்பதாகவும் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்க வேண்டும் எனவும் கோரப்படுவது பற்றி ?**

அபாயகர ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை இந்த யோசனையை முற்றாக எதிர்க்கிறது. கஞ்சா செடியில் உள்ள முக்கிய நச்சுப் பொருளான டெல்டா 9 டெட்ரா ஹைட்ரோகன்னாபினால் ஆகும். கஞ்சா அருந்தினால் அந்த நச்சு மனதில் குழப்பரமாக செயல்பட ஆரம்பிக்கும். எந்தவொரு மருந்தையும் சட்டப்பூர்வமாக்குவதற்கான காரணம் அதன் தீங்கு அல்ல. சமூகத்தின் தேவையேயாகும். 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றத்திற்கான உலக போதைப்பொருள் அறிக்கையின்படி, சட்டவிரோத போதைப்பொருள் பாவனையால் உலகில் இறந்தவர்களின் எண்ணிக்கை 199,900 ஆகும். அதே ஆண்டில், மது தொடர்பான பிரச்சினைகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை 3 மில்லியன்களாகும். ஆனால் மதுபானம் சட்டப்பூர்வமானது. எனவே ஒரு மருந்தை சட்டப்பூர்வமாக்குவது அதன் நுகர்வு வேகமாக அதிகரிக்க வழிவகுக்கிறது.

**கேள்வி. சிறுவர்களை போதைப்பொருளில் இருந்து காப்பாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?**

முடிந்தவரை அவற்றின் விநியோகத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் தனிநபர் அதற்கு அடிமையாகாமல் இருக்க அவர்களின் ஆற்றலை உயர்த்துவது தான் சிறந்த தீர்வாகும். அதாவது பிள்ளைகளின் தன்னம்பிக்கை, தாங்கும் திறன், எதிர்க்கும் திறன் ஆகியவற்றை சிறு வயதிலிருந்தே வளர்க்க வேண்டும்.

பாஹிம்...

## அங்கத்தவர் பெயர் பட்டியலை காட்சிப்படுத்துதல்

வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கத்தின் 2022-06-30ஆம் திகதிக்கான அங்கத்தவர் பெயர்ப் பட்டியலை காட்சிப்படுத்துதல் 2022-07-11ஆம் திகதி முதல் 2022-07-25ஆம் திகதி வரையில் பிரதேசத்தின் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள இதற்கு இயைபான பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படும். திருத்தங்கள் உள்ளதாயின் 2022-07-25ஆம் திகதிக்கு முன் செயலாளர், வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கம், ஹெட்டிபொல எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

இந்த அறிவித்தல் வழங்கப்படுவதானது 1981/2 2016 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ள விதிமுறைகளின் பிரகாரம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

| பிரதேச இலக்கம் | பிரதேசத்தின் பெயர் | அங்கத்தவர் பெயர்ப் பட்டியலில் காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 01 | பண்டுவஸ்நுவர | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 02 | ஹெட்டிபொல | ஹெட்டிபொல பிரதேசம் |
| 03 | குரு/கடவலகெதர | நுகவெல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 04 | பண்டாரகொஸ்வத்த | பண்டாரகொஸ்வத்த பிரதேசம் |
| 05 | மிதியால | பணடாரகொஸ்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 06 | திவுல்வெவ | திவுல்வெவ பிரதேசம் |
| 07 | மதுல்ல | மதுல்ல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 08 | டெகெவ | ஹெட்டிபொல பிரதேசம் |
| 10 | மடஇன | மடஇன பிரதேசம் |
| 11 | அக்குரண | அக்குரண பிரதேசம் |
| 12 | மகுலாகம மெதகம | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 13 | மண்டபொல | மண்டபொல பிரதேசம் |
| 14 | ரம்பேவ | மதுல்ல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 15 | மொரகனே | ஹித்தரபொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 16 | கனோகம | கனோகம பிரதேசம் |
| 17 | திஸ்ஸவ | திஸ்ஸவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 18 | துனுபொத | துனுபொத பிரதேசம் |
| 19 | மாடிஹேன | கெல்லேஹெபடிய மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 20 | ஹித்தரபொல | ஹித்தரபொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 21 | தெமவட | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 22 | கிரிமெட்டியாவ | கிரிமெட்டியாவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 23 | ஹங்வெல்ல | ஹங்வெல்ல பிரதேசம் |
| 24 | விஜய உதாகம | விஜய உதாகம மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 25 | கல்லேஹெபிட்டிய | கல்லேஹெபிட்டிய மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 26 | அடுக்கனே | கிரிமெட்டியாவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 27 | கந்தே மெதகம | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 28 | ரத்மல்ல | துனுபொத பிரதேசம் |
| 32 | மூனமல்தெனிய | மூனமல்தெனிய மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 33 | மடிகே மிதியால | பண்டாரகொஸ்வத்த பிரதேசம் |
| 34 | மொரகொல்ல | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 40 | மகுலாகம | மகுலாகம பிரதேசம் |
| 41 | கொமுகொமுவ | கொமுகொமுவ பிரதேசம் |
| 42 | எபலதெனிய | கொமுகொமுவ பிரதேசம் |
| 43 | குளி/கடவலகெதர | கொமுகொமுவ பிரதேசம் |
| 44 | நிந்தவெல | நிந்தவெல பிரதேசம் |
| 45 | மள்வானேகெதர | மல்வானேகெதர மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 46 | கம்புராபொல | மூனமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 47 | போதிமுல்ல | போதிமுல்ல பிரதேசம் |
| 49 | பரம்பொல | பரம்பொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 50 | தஹனெக்கெதர | மூனமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 51 | வீதியாவல | மூனமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 52 | இஹல பிஹிஓய | பரம்பொல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 53 | பண்டாரதம்பிட்டிய | பரம்பொல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 54 | பஹல பிஹிஓய | பரம்பொல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 55 | கரந்தவ | அக்குரண பிரதேசம் |
| 56 | உடகம | பரம்பொல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 57 | கட்டகமுவ | பண்டாரகொஸ்வத்த பிரதேசம் |
| 58 | குருந்து கும்புர | ஹெட்டிபொல பிரதேசம் |
| 59 | கோன்வெவ | மண்டபொல பிரதேசம் |
| 60 | கஹட்டவில | தோதெல்ல விவசாய விற்பனை நிலையம் |
| 61 | தொரபாவில | நுகவெவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 62 | தெமலதொர | திஸ்ஸவ கோப்சிட்டி விற்பனை நிலையம் |

.....................................

**செயலாளர்**

**வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கம்**

THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### கமத்தொழில் அமைச்சு

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**
**செயற்றிட்ட இல.: P163742**

**வடமேல் மாகாணத்தில் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக நடுகைப் பொருட்கள் மற்றும் சேதன உரங்களுக்கான பெறுகை**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) கிரயச் செலவிற்காகப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் வழங்கல்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, வடமேல் மாகாண பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைமனுப் பிணை முறி தொகை மற்றும் செல்லுபடிக் காலம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | LK-MOA-300439-GO-RFB/DPD(NWP)/Seeds packs(06)/2022/027 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIAP திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணத்தில் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15,762 (14 வகையான மரக்கறி விதைகள் மற்றும் சோள விதைகள்) விதை பக்கெற்றுகள், வேர் மற்றும் கிழங்கு நடுகைப் பொருட்கள், மஞ்சள் மற்றும் இஞ்சி மற்றும் பழக் கன்றுகள் மற்றும் 25 கி.கிராம் சேதன உரப் பைகளுக்கான பெறுகை. | 6,000.00 | 175,000.00 2022 ஒக்டோபர் 15ஆம் திகதி வரை |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்களின் மூலப் பிரமான விபரக்குறிப்புகள், நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்பு, இல. 51, மிஹிந்து மாவத்தை, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **037-2227950**, தொலைநகல்: **037-2227950**, மின்னஞ்சல்: **dpdcsiapnwp@gmail.com**) மற்றும் அதே இடத்தில் 2022 ஜுலை 05ஆம் திகதி முதல் 2022 ஜுலை 26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2022 ஜுலை 05ஆம் திகதி முதல் 2022 ஜுலை 26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மட்டும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 5ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்ட பணிப்பாளருக்கு அசல் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
7. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர்கள் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு மற்றும் வெட் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதம் மற்றும் / அல்லது விதைகள் /நடுகைப் பொருட்களுக்கான சான்றளிப்பை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாவிட்டால் பதிலளிக்காத விலைக்கோரலாகக் கருதி நிராகரிக்கப்படும்.
9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஜுலை 12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்வதற்கு முன் விலைக்கோரல் ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்புகள், ITB மற்றும் ஒப்பந்தத் தரவுகளை நன்கு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
10. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகை மற்றும் செல்லுபடியாகும் தினத்திற்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் பொருட்களின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஜுலை 26ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை மேற்படி 5ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல. 51, மிஹிந்து மாவத்தை, யக்கஹபிட்டிய வீடமைப்பு, குருநாகல் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
13. விலைமனுக்கள் 2022 ஜுலை 25ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (வடமேல் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்),**
**இல. 51, மிஹிந்து மாவத்தை, யக்கஹபிட்டிய வீடமைப்பு,**
**குருநாகல்.**

திகதி: 2022-07-01

## மலையக புகையிரத சேவை வழமைக்கு திரும்பியதால் பயணிகளின் சிரமங்கள் நீங்கின

*ஹற்றன் விஷேட நிருபர்*

புகையிரத ஊழியர்கள் முன்னெடுத்த திடீர் வேலை நிறுத்தப்போராட்டம் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை (01) தடைப்பட்டிருந்த பல புகையிரத சேவைகள் மறுநாள் சனிக்கிழமை (02) வழமைக்கு திரும்பின.

இந்த புகையிரத சேவைகள் வழமைக்கு திரும்பியதையடுத்து கொழும்பிலிருந்து பதுளைக்கும் பதுளையிலிருந்து கண்டி, கொழும்புக்கும் புகையிரத சேவைகள் வழமை போல் இடம்பெறுவதாக புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல தனியார் பஸ்கள் பொதுப் போக்குவரத்தில் ஈடுப்படவில்லை. இதனால் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஒரு சில பஸ்களும், ஒரு சில தனியார் பஸ்களும் மாத்திரமே சேவையில் ஈடுபட்டன.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொது போக்குரவத்து இடம்பெற்றதனால்,அதிகமான பயணிகள் புகையிரத்தை பயன்படுத்தியிருந்தனர்.

இதனால் ஏனைய நாட்களை விடவும், புகையிரத்தத்தில் பயணஞ் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டன.

இதேநேரம், ஹற்றன் எண்ணெய் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாத போதிலும் கடந்த சில நாட்களாக வாகனங்கள் வரிசையில் காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரத்தினக்கல் நூதனசாலை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டதால் நிதி வீண்விரயம்

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

இரத்தினபுரி நகரில், மினி நூதனசாலையை அமைப்பதற்கு செலவிட்ட 36 இலட்சம் ரூபா நிதி வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வுத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி நகரில் 266 சதுர அடி நிலப்பரப்பில் இந்த நூதனசாலையை அமைக்க இரத்தினக்கல் அதிகாரசபை 2016 முதல் 2019 காலப்பகுதியில் நிதி ஒதுக்கீடு செய்தது.

தற்போது, இது வேறிடத்தில் அமைக்கப்பட்டது.

இதனால், முந்திய இடத்தில் இதனை அமைக்க செலவிட்ட நிதி வீண்விரயமாக்கப்பட்டுள்ளதாக இரத்தினக்கல் தங்க ஆபரண அதிகார சபைமின் வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முன்னர் அமைக்கப்பட்ட மினி நூதனசாலை மண்டபத்தின் கொள்வனவுக்காக 21 இலட்சம் ரூபாவும், இதன் புனரமைப்புப்பணிகளுக்காக 15 இலட்சம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள ஏற்பாட்டில் சிரமதானப்பணி

*தலவாக்கலை குறூப் நிருபர்*

சிவனொளிபாதமலை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை சேகரித்து அகற்றும் சிரமதானப்பணி, சிவனொளிபாதமலை தளத்தின் பொறுப்பாளரும் அதன் காவலருமான டி. பி. சியாசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

நல்லதண்ணி வனவிலங்கு தள பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளும் இந்த சிரமதான பணியில் கலந்துக்கொண்டனர்.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.






தென்பகுதி கடலில் நேற்றுமுன் தினம் (02) மாலை கடல் அலை மிக வேகமாக வீசியதனால் கடல் நீர் கிராமங்களுக்குள் புகுந்ததோடு இதனால் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் பெரும் பீதி அடைந்தனர். காலி வீதியில் வாகனங்களில் பயணித்தோரும் இதனால் அச்சமடைந்தனர். பேருவளை மருதானை பகுதியிலும் வீசிய கடல் அலையினால் கடற்கரையை அன்றிய வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்துள்ளதை படங்களில் காணலாம்.

(படங்கள் பேருவளை விசேட நிருபர்)

# பெறுகை அறிவித்தல்

## நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்

## தேசிய போட்டி ரீதியில் கேள்வி கோரல் (NCB)

## நிதி மூலாதாரம் – ஆரம்ப சுகாதார பராமரிப்பு மேம்படுத்துதல் செயற்றிட்டம் / பராமரிப்பு ஒதுக்கீடு

1. நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமைகள் உள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுவதுடன் குறித்த வேலைகளும் நிதி மூலாதாரமும், அதற்குரிய பொறியியல் அளவுப்பத்திரத் தொகையும் ஒப்பந்தக் காலமும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. இயைபுடைய வேலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள CIDA நாளதுவரையில் தரவேற்றம் செய்யப்பட்ட பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹாவாஎலிய, நுவரெலியா அலுவலகத்திலிருந்து (தொலைபேசி இலக்கம் 052-2234482) பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அந்த அலுவலகத்தில் உரித்துடைய ஆவணங்களையும் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்க முடியும்.
4. உரிய கேள்வி ஆவணக் கட்டணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்கியல் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்விப் படிவம் மற்றும் ஆவணங்களை 2022-07-04ஆம் திகதி முதல் 2022-07-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையான காலப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
5. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை 2022-07-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) அவர்களின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹாவா எலிய, நுவரெலியா எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6 பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் அட்டவணையில் தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்தில் (CGF) பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பிணை முறியொன்று அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரதி நிதிப் பணிப்பாளர் அவர்களுக்குப் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை எல்லாக் கேள்விகளுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்வி ஆவணங்களில் வேண்டப்பட்டுள்ள தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய தகைமைகளுடனான அனைத்து ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. உரிய தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திராத கேள்விதாரர்களின் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
10. கேள்வியைக் கையளித்தல், இரத்துச் செய்தலுக்கான இறுதித் தீர்மானத்தை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

| தொ. இல | வேலை | பொறியியல் அளவுப் பத்திரப் பெறுமதி ரூபா மில்லியன் (வெட் இன்றி) | தேவையான ஆகக் குறைந்த பதிவு (CIDA) | மீளளிக்கப்படும் வங்கிப் பிணை முறி அல்லது ரொக்கப் பணம் | | ஒப்பந்தக் காலம் (வாரங்கள்) | கேள்விப் பிணை முறி செல்லுபடியாகும் காலம் (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) (மீளளிக்கப் படாதது) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பிணை முறியின் பெறுமதி (ரூபா) | பண வைப்பு (ரூபா) | | | |
| கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் | | | | | | | | |
| நிதி மூலாதாரம் - ஆரம்ப சுகாதார பராமரிப்பு மேம்படுத்துதல் செயற்றிட்டம் | | | | | | | | |
| 1 | முல்ஓய பிரதேச வைத்தியசாலையில் பற் சிகிச்சை பிரிவை நிறுவுதல் | 6,750,000.00 | C6 அல்லது C7 | 135,000.00 | 67,500.00 | 20 | 105 | 3,500.00 |
| 2 | ஹைபொரஸ்ட் பிரதேச வைத்தியசாலையின் கட்டிடமொன்றை பற் சத்திரசிகிச்சை நிலையமாக மாற்றியமைத்தல் | 4,930,000.00 | C7 அல்லது C8 | 98,600.00 | 49,300.00 | 15 | 91 | 3,000.00 |
| 3 | லக்ஷபான பிரதேச வைத்தியசாலையில் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் | 1,660,000.00 | C9 அல்லது C8 | 33,500.00 | 16,750.00 | 12 | 77 | 1,500.00 |
| 4 | மடுல்ல பிரதேச வைத்தியசாலையில் பற் சிகிச்சைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 3,063,000.00 | C7 அல்லது C8 | 61,500.00 | 30,750.00 | 12 | 91 | 2,000.00 |
| 5 | முன்வத்த ஆரம்ப வைத்திய பிரிவின் பிரதான கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் | 3,579,000.00 | C7 அல்லது C8 | 72,000.00 | 36,000.00 | 12 | 91 | 2,000.00 |
| 6 | பள்ளேபோவல ஆரம்ப சிகிச்சைப் பிரிவின் மிகுதி வேலைகள் | 3,323,000.00 | C7 அல்லது C8 | 66,500.00 | 33,250.00 | 12 | 91 | 2,500.00 |
| 7 | நில்தண்டாஹின்ன பிரதேச வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் (படிநிலை 3) | 8,330,000.00 | C6 அல்லது C7 | 167,000.00 | 83,500.00 | 20 | 105 | 4,000.00 |
| 8 | ரூபஹ ஆரம்ப சிகிச்சைப் பிரிவின் அவசர திருத்தவேலைகள் | 1,053,000.00 | C9 அல்லது C8 | 22,000.00 | 11,000.00 | 10 | 77 | 1,500.00 |
| 9 | மடுல்ல பிரதேச வைத்தியசாலையில் ஆண் / பெண் தாதி உத்தியோகத்தர் கடமை அறையை நிர்மாணித்தல் | 7,670,000.00 | C6 அல்லது C7 | 153,500.00 | 76,750.00 | 20 | 105 | 3,500.00 |
| 10 | லக்ஷபான ஆரம்ப வைத்தியசாலையின் மின்சார முறைமை திருத்தவேலைகள் | 4,873,000.00 | C7 அல்லது C8 | 97,500.00 | 48,750.00 | 15 | 91 | 2,500.00 |
| 11 | கீர்த்திபண்டாரபுர ஆரம்ப வைத்திய பிரிவில் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் | 2,842,000.00 | C7 அல்லது C8 | 57,000.00 | 28,500.00 | 12 | 91 | 2,000.00 |
| 12 | கந்தபொல சுகாதார நிலையத்தின் திருத்தவேலைகள் | 3,085,000.00 | C7 அல்லது C8 | 61,700.00 | 30,850.00 | 12 | 91 | 2,000.00 |
| 13 | கீர்த்திபண்டாரபுர குடும்ப சுகாதார சேவை அதிகாரியின் உத்தியோகபூர்வ விடுதி திருத்தவேலைகள் | 6,865,000.00 | C6 அல்லது C7 | 137,500.00 | 68,750.00 | 20 | 105 | 3,500.00 |
| 14 | ரத்னாகிரிய சுகாதார நிலையத்தின் திருத்தவேலைகள் | 3,255,000.00 | C7 அல்லது C8 | 65,200.00 | 32,600.00 | 12 | 91 | 2,500.00 |
| 15 | டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் கழிவு நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு முறைமையின் திருத்தவேலைகள் | 1,723,000.00 | C9 அல்லது C8 | 35,000.00 | 17,500.00 | 12 | 77 | 2,000.00 |
| 16 | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 4,644,000.00 | C7 அல்லது C8 | 93,000.00 | 46,500.00 | 15 | 91 | 2,500.00 |
| 17 | உடபுஸ்ஸல்லாவ பிரதேச வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 8,970,000.00 | C6 அல்லது C7 | 180,000.00 | 90,000.00 | 20 | 105 | 4,000.00 |
| 18 | மஸ்கெலிய பிரதேச வைத்தியசாலையின் பிரவேச பாதை முறைமையின் திருத்தவேலைகள் | 330,000.00 | C9 அல்லது C8 | 6,600.00 | 3,300.00 | 8 | 77 | 1,000.00 |
| 19 | ரிகில்லகஸ்கட ஆரம்ப வைத்தியசாலையில் நீர் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல் | 1,737,000.00 | C9 அல்லது C8 | 35,000.00 | 17,500.00 | 12 | 77 | 2,000.00 |
| 20 | உடபுஸ்ஸல்லாவ பிரதேச வைத்தியசாலை அம்பியூலன்ஸ் நிறுத்தகத்தின் திருத்தவேலைகள் | 345,000.00 | C9 அல்லது C8 | 7,000.00 | 3,500.00 | 8 | 77 | 1,000.00 |
| 21 | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவின் நிறுவனப் பொறுப்பதிகாரி உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 678,000.00 | C9 அல்லது C8 | 13,600.00 | 6,800.00 | 10 | 77 | 1,000.00 |
| நிதி மூலாதாரம் - பராமரிப்பு | | | | | | | | |
| 01 | கொட்டகல பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 1,786,000.00 | C9 அல்லது C8 | 35,800.00 | 17,900.00 | 12 | 77 | 2,000.00 |
| 02 | மிஹிந்துபுர சுகாதார நிலையத்தின் திருத்தவேலைகள் | 3,589,000.00 | C7 அல்லது C8 | 72,000.00 | 36,000.00 | 12 | 91 | 2,500.00 |
| 03 | கந்தேஎல இளைஞர் படையணி நிலையத்தின் திருத்தவேலைகள் | 1,002,000.00 | C9 அல்லது C8 | 20,500.00 | 10,250.00 | 10 | 77 | 1,500.00 |
| 04 | டயகம பிரதேச வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 4,195,000.00 | C7 அல்லது C8 | 84,000.00 | 42,000.00 | 15 | 91 | 2,500.00 |
| 05 | டிக்கோயா ஆரம்ப மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 5,869,000.00 | C6 அல்லது C7 | 118,000.00 | 59,000.00 | 20 | 105 | 2,500.00 |
| 06 | கொத்மலை பிரதேச வைத்தியசாலையின் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் | 4,950,000.00 | C7 அல்லது C8 | 99,000.00 | 49,500.00 | 15 | 91 | 2,500.00 |
| 07 | பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலை உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 8,655,000.00 | C6 அல்லது C7 | 173,500.00 | 86,750.00 | 20 | 105 | 4,000.00 |
| 08 | மல்தெனிய பிரதேச வைத்தியசாலையின் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 3,568,000.00 | C7 அல்லது C8 | 71,500.00 | 35,750.00 | 12 | 91 | 2,000.00 |
| 09 | மல்தெனிய பிரதேச வைத்தியசாலையின் சுற்று திருத்தவேலைகள் | 1,472,000.00 | C9 அல்லது C8 | 30,000.00 | 15,000.00 | 12 | 77 | 1,500.00 |
| நிதி மூலாதாரம்: சுகாதார அமைச்சின் முதியோர் சுகாதாரம் | | | | | | | | |
| 01 | வலப்பனை பிரதேச வைத்தியசாலையில் மனநல நோயாளர் வார்ட்டின் மலசலகூட திருத்தவேலைகள் | 1,795,000.00 | C9 அல்லது C8 | 36,000.00 | 18,000.00 | 12 | 77 | 2,000.00 |
| 02 | ரிகில்லகஸ்கட ஆதார வைத்தியசாலையின் 5 மற்றும் 6ஆம் இலக்க வார்டுகளின் மலசலகூட திருத்தவேலைகள் | 1,896,000.00 | C9 அல்லது C8 | 38,000.00 | 19,000.00 | 12 | 77 | 2,000.00 |
| 03 | உடபுஸ்ஸல்லாவ பிரதேச வைத்தயிசாலையின் மலசலகூட முறைமை திருத்தவேலைகள் | 1,609,000.00 | C9 அல்லது C8 | 32,200.00 | 16,100.00 | 12 | 77 | 2,000.00 |
| 04 | பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் உள்ள கழிவறையை முதியோர்கள் பயன்படுத்தும் வகையில் மேம்படுத்துதல் | 1,945,000.00 | C9 அல்லது C8 | 39,000.00 | 19,500.00 | 12 | 77 | 2,000.00 |
| 05 | வட்டவல பிரதேச வைத்தியசாலையின் மலசலகூட முறைமையின் திருத்தவேலைகள் | 1,430.000.00 | C9 அல்லது C8 | 28,600.00 | 14,300.00 | 12 | 77 | 1,500.00 |

## ஹெரோயினுடன் சந்தேக நபர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஹெரோயின் போதைப் பொருளினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 30 ஆம் திகதி மாலை தலாவ பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் நடாத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் 5 கிராமும் 200 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளினை தலாவ பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 41 வயதுடைய ஹிதோகம பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹெரோயின் போதைப்பொருளினை தலாவ மற்றும் மொறகொட துறுளிய செவனபகுதிகளில் விற்பனை செய்து வந்துள்ளார் என்பது பொலிஸார் நடத்திய மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பல்கலைக்கழக மாணவனுக்கு ரோட்டரி கழகம் நிதியுதவி

நுவரெலியா தினகரன் நிருபர்

ஹற்றனில் வசிக்கும் கிருஸ்ணசாமி சர்தாசன், பழ்கலைக்கழக கல்வியை தொடர்வதற்காக 60,000 ரூபா வழங்கப்படுகின்றது. டிக்கோயா ரோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் இந்நிதி வழங்கப்படுகிறது.

மாதாந்தம் 5000.00 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு இத்தொகை வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை லண்டனில் வசிக்கின்ற யோகேஸ்வரன் என்பவரும் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் உறுப்பினர் சிதம்பரம்பிள்ளை சப்பானி ஆகிய இருவரும் இணைந்து டிக்கோயா ரோட்டறி கழகத்திற்கு வழங்குகின்றனர்.

டிக்கோயா ரோட்டறி ஊடாக மாதாந்தம் இம் மாணவனுக்கு 5000.00 ரூபா வீதம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

முதல் இரண்டு மாதங்களுக்கான தொகையான 10000 ரூபாவை அண்மையில் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு, உறுப்பினர்களான டாக்டர் சந்திரராஜன் சோமசுந்தரம் ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரியின் ஆசிரியர் சத்திய மூர்த்தி ஆகியோர் இணைந்து மாணவனின் தாயாரிடம் கையளித்தனர்.

## உணவு நெருக்கடியை எதிர்கொள்ள மலையகத்தில் வேலைத்திட்டம்

அக்குறணை குறூப் நிருபர்



எதிர்கால உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில், மத்திய மாகாணத்தை தயார்படுத்தும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகேயின் வழிகாட்டலில் இவை இடம்பெற்று வருகின்றன.

'மத்திய மாகாண விவசாயப் புத்தாக்க உணவுப் பயிர்ச்செய்கை' என்ற வேலைத் திட்டத்தின் கீழ் இவை இடம் பெறுகின்றன.

இதற்கிணங்க, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அஜித் பிரேமசிங்க தலைமையில் அண்மையில் (03) சில வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்பிரகாரம், பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டன. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். அதிகாரிகள் உற்பத்தியில் ஈடு பட்டுள்ளதைக் காணலாம்.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## அறிவித்தல் - முகவரி மாற்றம்

Muslim Aid
Serving Humanity

**முஸ்லீம் ஏயிட் இலங்கை அலுவலகம்**
பதிவு இல FL 104104
புதிய முகவரி: 6/2, மல்வத்த குறுக்கு ஒழுங்கை, தெஹிவளை.
**தொலைபேசி : 011-2076160**
**தொலைநகல் : 011-2076159**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹொரண, முணகம, டிக்ஹேனபுர, இரண்டாம் படிநிலை, 15 ஆம் ஒழுங்கை, 85 ஆம் இலக்கத்தில் வசிக்கும் யசஸ் சேலக்க சமரசிங்க (தே.அ.அ. 942830785V) ஆகிய அற்றோணித்தத்துவ உரிமைக்காரரான என்னால், ஹொரண, முணகம, திக்ஹேனபுர, இரண்டாம் படிநிலை 15 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த டில்ஷான் சமிந்த சமரசிங்க என்பவருக்கு 2018.06.25 திகதியும் 1929 ஆம் இலக்கத்தையும் கொண்டதும் பிரசித்த நொத்தாரிஸ் சீதா ரோஹினி அல்பேர்ட் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கிய சாதாரண அற்றோணித்தத்துவமானது இன்றிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**யசஸ் சேலக்க சமரசிங்க**

**2022 ஜுன் மாதம் 30 ஆம் தினத்தன்று**

## பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சு - மாவட்ட பொது வைத்தியசாலை, கேகாலை**

### பிரதான உணவகம் மற்றும் உப உணவகத்தை நடாத்திச் செல்லல்

01. மேற்படி சேவையை ஒரு வருட காலத்திற்கு நடத்திச் செல்வதற்காக 2022 ஜுலை 25 மு.ப. 10.30 வரை கேகாலை பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் உணவகத்தை நடத்திச் செல்லும் அனுபவத்துடனான உணவக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

02. இப் பெறுகை பற்றிய கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு முன்பு கலந்துரையாடலொன்று 2022.07.20ம் திகதி மு.ப. 10.30 இற்கு பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

    1. ரூ. 3000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பொது 172 பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2022 ஜுலை 04 முதல் 2022 ஜுலை 22 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேகாலை பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்வி ஆவணங்களை பரீட்சித்து பார்த்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை,**
**கேகாலை.**

## கேள்வி அழைப்பு

**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை கேகாலை**

### பிரதேச மருத்துவ வழங்கல்கள் பிரிவில் ராக்கை அமைப்பை தயாரித்தல்

1. கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கீழ் உள்ள பிரதேச மருத்துவ வழங்கல்கள் பிரிவின் ராக்கை அமைப்பை தயாரித்தல் சார்பாக தகைமையுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து 2022.07.26ம் திகதி மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. (மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 5 மில்லியன்)
2. கேள்வி ஆவணங்களை கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிலிருந்து 2022.07.04 முதல் 2022.07.25 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூபா 250.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்கு வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் (திரு) இடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் மற்றும் கேள்வி கோரல் பத்திரங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். (தொ.பே. இல. 035-2222571)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**கேகாலை.**
**தொ.பே. 035-2222549, 035-2222578, 035-2222571**
**பெக்ஸ்: 035-2221253**

CSIAP
THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**கமத்தொழில் அமைச்சு**

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**

**IDA கடன் இல.: P163742**

**உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் மத்திய பருவகாலத்தில் பயிர்ச்செய்கைக்காக 31,000 கி.கிராம் பாசிப் பயறு விதைகள், 1000 கி.கிராம் நிலக்கடலை விதைகள் மற்றும் 400 கி.கிராம் கௌபீ விதைகளின் பெறுகை**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் (ஊவா மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| 1 | LK-MOA-300254 -GO-RFB/ DPDO (UP)/Seeds packs(08)/ 2022/012 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் மத்திய பருவகாலத்தில் பயிர்ச்செய்கைக்காக 31,000 கி.கிராம் பாசிப் பயறு விதைகள், 1000 கி.கிராம் நிலக்கடலை விதைகள் மற்றும் 400 கி.கிராம் கௌபீ விதைகளின் பெறுகை | 4,000.00 | 200,000.00 2022 டிசம்பர் 19ஆம் திகதி |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்களின் மூலப் பிரமான விபரக்குறிப்புகள், நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வெள்ளவாய, இல. 09, ஹப்புத்தளை வீதி, பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் (ஊவா மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/ தொலைநகல் இல.: 055-2280334) மற்றும் அதே இடத்தில் 2022 ஜுலை 04ஆம் திகதி முதல் 2022 ஜுலை 25ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 ஜுலை 06ஆம் திகதி முதல் 2022 ஜுலை 04ஆம் திகதி முதல் 2022 ஜுலை 25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 5ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
7. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர்கள் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு மற்றும் வெட் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதம் மற்றும் / அல்லது விதைகள் /நடுகைப் பொருட்களுக்கான சான்றளிப்பை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாவிட்டால் பதிலளிக்காத விலைக்கோரலாகக் கருதி நிராகரிக்கப்படும்.
9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஜுலை 12ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு மேற்படி 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்வதற்கு முன் விலைக்கோரல் ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்புகள், ITB மற்றும் ஒப்பந்தத் தரவுகளை நன்கு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
10. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகை மற்றும் செல்லுபடியாகும் தினத்திற்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
11. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் பொருட்களின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஜுலை 25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (ஊவா மாகாணம்), இல. 09, ஹப்புத்தளை வீதி, வெள்ளவாய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
14. விலைமனுக்கள் 2022 ஜுலை 25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்),**
**இல. 90, ஹப்புத்தளை வீதி,**
**வெள்ளவாய.**

2022-07-01ஆம் திகதி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்**

**Oce CS 3500Z Inkjet Production அச்சுப்பொறிக்கு 200 காகித சுருள்களை வழங்குவதற்கான பெறுகை**

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள Oce CS 3500Z Inkjet Production அச்சுப்பொறிக்கு 200 காகித சுருள்களை வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200 அல்லது 011-2785219) மற்றும் 2022-07-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2022-07-22ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 9200.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-07-18ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.
8. விலைமனுக்கள் 120 நாட்கள் வரையில் (2022-11-23ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் இல. ரூபாவிற்கான (350,000.00 இலங்கை ரூபா) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு (2022-12-23ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2022-07-25ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''**Oce CS 3500Z Inkjet Production அச்சுப்பொறிக்கு 200 காகித சுருள்களை வழங்குவதற்கான பெறுகை** - ஒப்பந்த இல.: 4/4/4/2022'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
12. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

2022-07-04

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 யூலை 06ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 70,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122J077 | LKA18223A063 | LKA36423G072 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 17,500 | 17,500 | 70,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2022 யூலை 06 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2022 யூலை 08 |
| வழங்கப்படும் திகதி | : | 2022 யூலை 08 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2022 யூலை 06, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## பெறுகை அறிவித்தல்

**ஹல்லுமுல்ல பிரதேச சபை**

### 2022 – 2023 ஆண்டிற்கு உட விஹாரகல காட்சிப்படுத்தல் நிலையத்தை குத்தகைக்கு விடல்

**(2022.07.01 முதல் 2023.06.31 வரை)**

ஹல்துமுல்ல பிரதேச சபைக்கு சொந்தமான இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2022.07.01ம் திகதி முதல் 2023.06.31 வரை ஒரு வருட கால எல்லைக்கு குத்தகைக்கு விடுவதற்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.07.25 மு.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

02. கேள்வி மாதிரிப்பத்திரங்கள் விநியோகித்தல் 2022.07.04ம் திகதி முதல் 2022.07.24ம் திகதி மு.ப. 10.00 வரை அலுவலக நேரங்களில் இடம்பெறும்.

    2022.07.25 மு.ப. 10.10 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.

| தொடர் இலக்கம் | சொத்து விபரம் | வருடாந்த குறைந்த பட்ச கேள்வி ரூ. | பெறுகைப் படிவக் கட்டணம் ரூ. | பெறுகை பிணை வைப்பக் கட்டணம் ரூ. (மீளளிக்கப்படும்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | உடவிஹாரகல காட்சிப்படுத்தல் நிலையம் கேள்வி கோரல் | 300,000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |

03. மேற்படி வைப்புக் கட்டணம் மற்றும் படிவக் கட்டணத்தை செலுத்திய பின்னர் ஹல்தும் முல்ல பிரதேச சபை தலைமையகத்தில் கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் பத்திரங்களை குறித்த தினம் குறித்த நேரத்திற்கு அல்லது குறித்த தினம் குறித்த நேரத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து இவ் அலுவலகத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
04. கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளல் பற்றிய மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது தொ.பே. மூலம் விசாரித்து அறியலாம். (057-2050032)
05. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் ஹல்லுமுல்ல பிரதேச சபை பெறுகை சபைக்கு உரியது.

**எஸ். அசோக் குமார்,**
**தலைவர்,**
**ஹல்துமுல்ல பிரதேச சபை.**

2022.07.01ம் திகதி ஹல்துமுல்ல பிரதேச சபையில்

# பொது அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெரிய அளவிலான வாகனங்கள் அதில் குறிப்பிட்டுள்ள பாதையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களில் பயணம் செய்யும் என்பதை பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**திகதி மற்றும் நேரம்** : 2022.07.01 ஆம் திகதியிலிருந்து 2023.01.01 ஆம் திகதி வரையும் பி.ப. 10 மணிக்கும் மு.ப. 4 மணிக்குமிடையில்.

**வாகனங்களின் இலக்கங்கள்** : 290-0727/LA99TTNRN8DOJHP058/WPLY4942/T40004-11LTL/WP LY 3173/T40005-11LTL/WP LY 3174/WP LX 1187/WP LY 2338/WP LX 0507/WP LY 3995/WP LX 3559/WP LY 3996/45-7882/WP LY 0818/WP G22 5058/WP G22 5059.

